
தென்மொழி
25
காசுகள்
பொறுப்பாசிரியர்:
பெருஞ்சித்திரன்

# பொறுப்பாசிரியர்

பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர் குழு.

புலவர். முதுகண்ணன்.

புலவர். ஆ. அழகன்.

பாவலர். மா. இலெனின். பி. ஏ.

# சிறப்பாசிரியர்

'தென்மொழி' என்னும் பெயர்பூண்டு வெளிவரும் இவ்விதழ்க்குச் சிறப்பாசிரியராகவிருக்க திராவிடமொழியாராய்ச்சி வல்லுநர் **புலவ, பண்டித, வித்துவ, ஞா. தேவநேயப் பாவாணர்** எம். ஏ. அவர்தம்மை, நாம் வேண்டிக்கொண்டதற்கிணங்க, அவரும் உளமுவந்து இசைந்தாராயினும். அவர் செந்தமிழ்த் தொண்டாற்றிவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் இன்னும் இசைவு தராமையினால் அவர் அப்பொறுப்பினை ஏற்க இயலாது போனமை பற்றி மிகவும் வருந்துகின்றோம். விரைவில் அண்ணாமலையாரின் முந்து தமிழ்ப் பல்கலைக் கழகம் இச்செந்தமிழ்த்தொண்டை ஏற்க அவர்க்கு இசைவு தந்துதவுமாறு அக்கழக வேந்தரைப் பல்லாற்றானும் வேண்டிக் கொள்கின்றோம்.

- ஆசிரியர்.
தென்மொழி.

---

கருத்திற் பதிக்க.

இவ்விதழில் வரும் கதை, கட்டுரை, பாடல்களின் கருத்துக்களும், பெயர்களும், அவற்றால் வரும் நிறை குறைகளும் அவற்றை எழுதிய ஆசிரியர்தம்மைச் சாருமேயன்றி இதழ் ஆசிரியரை எவ்வகையானும் சாராது.

- ஆசிரியர்.

26-2-1


# தென்மொழி

**இலக்கிய இதழ்**


'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!


| இயல் 1 | திருவள்ளுவராண்டு 1990<br>ஆவணித்திங்கள் 1. (17—8—59) | இசை 2 |
|---|---|---|


## தனித்தமிழ்ப் பயிற்சி.

ஒருவர் கருத்துக்களை நாம் அறிதற்கும், நம் கருத்துக்களைப் பிறர்க்குணர்த்துதற்கும் இன்றியமையாதது மொழி. இத்தேவைகட்காக மொழி தோற்றுவிக்கப் பட்டதாயினும், நாம் பேசும்போது பிறர் வெறுப்படையாது கேட்கவும், கேட்பதில் ஒரு சுவையை நுகரவும், அவ்வாறு சுவையோடு மாந்திய சொற்களை எளிதே உள்ளத்திற் பதித்துக் கொள்ளவும் பொருட்டு அறிஞர் தம்மால் மொழி திருத்தப்பட்டு, எழிலும் இனிமையும் எய்தியது.

இரும்பைப் பழுக்கக் காய்ச்சி, உருமாற்றுவதற்காக அதனைப் பட்டடையின்மேல் வைத்துப் பருத்த சம்மட்டியால் ஓயாது தாக்கும் பேரொலியை ஒருவன் இசையென்று சுவைக்கக் கூடுமோ? ஆயினும் அதே பேரொலியோடு ஒழுங்குற ஏற்றியும் தாழ்த்தியும், மெலித்தும், வலித்தும் முழங்குகின்ற முழவொலி எத்துணை மாந்தர்தம் செவிகளைக் குளிர்விக்கின்றது. யாழ் நரம்புகளினின்றெழும் இன்னோசையும், ஏழ்துளைக் குழலினின்றெழும் இன்னிசையும் ஒருவரை மயக்குவது யாங்ஙனம்,? இதைச் செவி நுகர்வாலன்றிக் காட்சி நுகர்வாலும் காட்டுவோம். ஆங்கிலேயன் உடுக்கும் காலுறையை அணிந்துகொண்டு, அதற்கொப்ப மேற் குப்பாயம் (Coat) அணியாது, பெண்கள் உடுக்கின்ற கச்சையை உடுத்துக் கொண்டும், மலேயா நாட்டுக்காரன் கவிழ்க்கும் ஒருவகைக் கூடையைத் தலையில் கவிழ்த்துக்கொண்டும்

நெற்றியில் பட்டைக் கோடுகள் சாற்றிக் குங்குமம் அணிந்து கொண்டும், சீக்கியனைப்போல் மீசையும் தாடியும் வைத்தவாறு வருவான் ஒருவனைக் கண்டு எள்ளி நகையாடிப் புறம் போகார் ஒருவரேனும் இருப்பரோ ? இரார்; இரார். கண்கட்கு அழகும் செவிகட்கு இனிமையும் எவ்வாறு மிக வேண்டுவதாக விருக்கின்றதோ அவ்வாறே வாய்க்குச் சுவையும், இனிமையும் வேண்டுவதாக விருக்கின்றது.

எம்மொழியாயினும் ஒரு தனி மொழியில் பிறமொழி கலவாது உரையாடுவதே கேட்போருக்கும், கிளத்துவோர்க்கும் இன்பம் பயக்குவதேயன்றிப் பன்மொழிக் கலவை எவ்வகையானும் எவர்க்கும் இன்பம் பயவாதென்க. முழவுக்கென தனி முழக்க மிருப்பவும் பறையைப் போல முழவை ஒலித்தாலும் ஏழ்துளைக் குழலுக்கென தனி இசை முறை இருக்கவும், கொம்புபோல் பம்பினுலும் எவ்வாறு இன்பம் பயவாதோ அவ்வாறே ஒரு மொழிக்குரிய சொல்முறை இருப்பவும், காழ்ப்பாலோ, அறியாமையாலோ, பிற மொழிக்குரிய சொற்களைக் கலந்து பேசுவதும் பெருங் குற்றமென்க. இனிப் பேசுவதே பிறர்க்கு வெறுப்பும், துன்பமும் உண்டாக்குவதாயின், எழுதுவதோ அவியவியலாத மனக்கசப்பையும், சினத்தையும் உண்டாக்குமென்பதை அறிஞர் மறுப்பரோ ? மறுக்கார்.

அவ்வாறு, பிறர்பற்றிக் கவலை கொள்ளாது, தமக்கிசைந்ததே ஏற்றமெனவும், தாமறிந்ததே அறிவெனவும், தாம் கற்றதே கல்வியெனவும், தாம் மொழிவதே மொழியெனவும், தாம் எழுதுவதே எழுத்தெனவுங் கூறுவார், காக்கை யொலிக்கும் குயிலிசைக்கும் வேற்றுமை காண வியலாதவர் என்று முழக்கி மறுக்க.

இஃது இவ்வாருக, அண்மையில் சென்னையில் நடந்த தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகட்குத் தலைமை ஏற்ற திருவாளர் இரா. சீ. தேசிகன் என்பார் "தமிழில் வடமொழிச் சொற்கள் கலந்து வருவது தமிழைச் சிறப்பிப்பதாயிருப்பதாகவும், வேண்டுமென்றே வடமொழிச் சொற்களை நீக்கி எழுதுவதே மறைமலை யடிகளார் எழுத்து என்று கூறிப் பெருமைப் படுகின்ருர் என்றும் உரைத்து, அப்படி எழுதுவதும் ஒரு தமிழா ? உரைநடைதாஞ ?" என்றும் கேட்டிருக்கின்ருர், இவர் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார், தமிழர்கட்கே பிறந்த

வராயினும். அறிஞர். திரு. அ. சிதம்பரநாதன் ஒருவரே, "தனித் தமிழில் உரைநடை எழுத மதுகை (ஆற்றல்) இல்லாமற் போவார், தனித்தமிழில் எழுதுவாரைக் குற்றம் கூறுதல் அறியாமையாகும்" என்றும், "இவ்வாறு தனித்தமிழ்ப்புலவர் தம்மைக் குறைவு படுத்திக்கூறும் எத்தகைய எழுத்தாளர்க்கும் தமிழ் நாட்டில் இடமில்லை" என்றும் முழங்கியிருக்கின்றனர். இவர் தமிழ் மானத்திற்கு நாம் தலை வணங்குகின்றோம்.

மொழியறிவும், மொழிப்பற்றுமின்றித் தம் பிழைப்பிற்காக உண்மையை மறைத்து உளறுவார், தமிழில் வடமொழி கலந்து எழுதுவதேபோல ஆங்கிலத்திலும், தமிழையும் வடமொழியையும் கலந்து எழுதிக்காட்டுவாரோ? காட்டுவதன்றியும் அதையே சிறப்பு என்றும் இவர் வலியுறுத்துவாரோ? திரு. தேசிகனர் மட்டுமன்றி கல்வியமைச்சர் திரு. சுப்பிரமணியனரும் பற்பலவிடங்களில், "மொழி வளர்ச்சிக்குப் பன்மொழிக் கலவை துணை புரியுமென்றும், அவ்வாறு கலக்கக்கூடாது என்பது வெறிச் செயலாகும் என்றும்" கூறிவருவது நாம் அறிந்ததே. தமிழ் நாட்டுக் கல்வியமைச்சர் வாயினின்று இவ்வாறு இழுக்கிய கருத்து வருவது தமிழ் நாட்டின் கெட்ட காலமே!

மக்களை அடிமைப் படுத்துவதே தன் வாழ்க்கைப் பணியாகக் கொண்ட கங்காணியின் தொழிலே உயர்ந்தது என்று ஒருவன் கூறினல், ஒன்றே அவன் கங்காணியாக விருத்தல் வேண்டும் ; அன்றே அவன் அவனல் பிழைப்பவனக விருத்தல் வேண்டும். இத்தகையோர் தமிழ் எழுத்தாளர் மாநாடு என்று கூட்டுவதை விட **"கலப்பு பாஷா ரைட்டர்ஸ் கான்பிரன்ஸ்"** என்று கூட்டலாமே.

தன்னுடைய திறமையின்மையால் தனித்தமிழ்ப் பயிற்சி கூடாது என்று மொழிவார் சார்பாக நின்று தமிழர் என்று தோள் தட்டுவார்க்கும் ஒன்று கூற விரும்புகின்கிறோம்.

பண்டைத்தமிழ் இனத்தவரும், தண்டமிழ்ப் புலவரும் தாங்கள் தமிழ்ப்புலவரெனக் கூறப்படுவதற்கிணங்க தனித்தமிழில் எழுதியும் பேசியும் வருகின்றனரா என்று அவர் எண்ணிப்பார்த்தல் வேண்டும், அவரே, அவ்வாறில்லையானல் ஒன்று மறியாத பொதுமக்கட்கும் அவர் தம்மை அடிமைப்படுத்தும் கூட்டத்தாருக்கும் தனித்தமிழ் உணர்வும், மான உணர்வும் எங்ஙனம் இருக்கும் என்பதை உன்னிப் பார்க்க வேண்டுகின்றோம்.

———

# வானம்பாடி

(புலவர். புனலன்)

வானம் ஒளியிழக்கும்; வையம் பகலிழக்கும்
மோனைக் கருக்கிருளில் முத்துக் குரலெடுத்துப்
பாடும் சிறுபுள்ளே பாடுகின்றாய் ஆனாலும்,
காடும் மலையும் கடந்து வருமிங்கோர்
ஏழை ஒருவன் இளநெஞ்சம் தானுருக,
யாழின் நரம்புகளை யாங்கொளித்து வைத்திருந்தாய் ?
பண்முண் டிசைப்புனலை பாரோர் செவிபெய்வாய் !
விண்மீன்கள் மேல்நின்றே விந்தைக் குரல்கொடுத்தாய் ?
நெஞ்சை உருக்கி நினைவை மயக்குகின்றாய்;
யாம இருள்வெளியில் யாக்கும் சிறுநாவால்
காமச் சிறுமலர்மேல் கன்னியிசை பாடுகின்றாய்
காலை மலரும் கனவுகளை மீட்டுகின்றாய்;
சாலை மலைமுகடு சாகாக் கடலலைகள்
எங்கும் இசைநுரையின் இன்பத்தைக் கொட்டுகின்றாய்!
பொங்கும் இசையால் புதுமயக்க மூட்டுகின்றாய் !
அன்பை இசைப்பாயோ? ஆசையைத்தான் பாடுவையோ ?
இன்பச் சிறகார்க்கும் இன்னிசையை மீட்டுவையோ ?
பூரிக்கும் நெஞ்சில் புரள்கின்ற இசையுணர்வால்
ஆரொருத்திக் காக அழகுக் குரலெடுத்தாய்?
வானை உருக்கி வடித்தோ இசைதருவாய்
தேனை இசைமலரில் தேக்குகின்ற புள்ளே !
கதையைக் கனவைக் கவின்பாட்டைப் பாட
மதுவைக் குடித்தாயா? மனம்உருகி விட்டாயா ?
நீலக் கடலலையாய் நீபாடும் இன்னிசையால்
கோலக் கனவைக் கொடு.

o o o

இனிக்கும் செந்தமிழ்க் காப்பியம்! இலக்கிய வேட்கையைத்
தணிக்கும் இசை யருவி! தத கருத்தால் உள்ளத்தைப்
பிணிக்கும் எழில் நடை!

**துரை. மாணிக்கம்**

எழுதிய

# கொய்யாக்கனி

விலை ரூ. 2-25

'தென்மொழி' கையொப்பக்காரர்க்கு

விலை ரூ. 2-00

**பலரும் பாராட்டுகின்றனர்.**

- **கொய்யாக்கனி** என்னும் இப்பனுவலுள் வருஞ் செய்யுட்களெல்லாம், நவின்றோர்க் கினிமையும், கேட்டோர்க்கின்பமும் பயக்குமளவு சொற்சுவை பொருட்சுவை செறிந்து ஆற்றொழுக்கான ஒழுகிசை நடையில் இயன்று, எல்லார்க்கும் பொருள் விளங்குமாறு முந்திரிப்பதமான செம்பாகமாய் அமைந்துள்ளன.. பல சிறந்த உண்மைகளை எடுத்துக்காட்டி, அறவொழுக்கத்தை வற்புறுத்துவது. **கொய்யாக்கனி** என்னும் இப்பனுவல் எல்லாத் தமிழர்க்கும் கொய்யுங் கனியாகுக.

  **பண்டித, புலவ, வித்துவ ஞா. தேவநேயப்பாவாணர்.**
  **எம். ஏ., எம். ஓ. எல்.**

- வெள்ளம் எப்படி, அப்படிப் போன்ற நடையிற் றம் நல்ல
  உள்ளம் எப்படி அப்படித் தந்ததோர் **உயர் தமிழ் நூல்** தான்
  உலகம் எப்படி அப்படிப் பட்டதோர்நிலை கொள்**கொய்யாக்கனியே**

  **-- பாவேந்தர் பாரதிதாசனார்.**

- சிறந்த பல கருத்துக்களின் களஞ்சியமாக விளங்குகின்றது **கொய்யாக்கனி.** **--தமிழ்நாடு 30-4-56.**

- "புதுமை மெருகு கலந்த காவிய நூல் **கொய்யாக்கனி.** கவிதைப் பித்தர்கள் அனைவரும் வாங்கிப் படிக்கவேண்டிய நூல் இது.

  **-- தென்றல். 13-3-56**

- புது உவமைகளை இடையிடையே அள்ளி வீசுகின்றது. உவமைகள் எண்ணி இன்புறத் தக்கன.....பண்டைப் பண்பாடும், புதுமை மணமும் விரவிப் பரிமளிக்கும் நல்ல காவியம் **கொய்யாக்கனி.**

  **-- சுதேசமித்திரன். 3-6-57**

- இக்காலத்துப் பெரிதும் விரும்பப்படும் எளிய இனிய செய்யுள் நடை...... இத்தகைய நன்முயற்சி பெரிதும் வர வேற்கத் தக்கதாகும். **-- திருச்சி வானொலி. 28-5-56.**

**கிடைக்குமிடம் :** **வள்ளுவர் பதிப்பகம்**
நெல்லிக்குப்பம். (தெ. ஆ.)
தமிழ்நாடு.

# "காற்சிலம்பு தந்த நூற்சிலம்பு"

மது. ச. விமலானந்தம் எம். ஏ.

பாட்டுடைத் தலைவனால் பெயர் பெற்றது சீவக சிந்தாமணி; பாட்டுடைத் தலைவியால் பெயர்பெற்றது மணிமேகலை; பாவடியால் பெயர் பெற்றது திருக்குறள்; பாடிய புலவனால் பெயர் பெற்றது கம்பராமாயணம்; பா அமைப்பால் பெயர்பெற்றன கலித்தொகையும், பரிபாடலும்; காலத்தாற் பெயர்பெற்றது கார்நாற்பது; இடத்தாற் பெயர்பெற்றது களவழி நாற்பது; ஊரால் பெயர்பெற்றன மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை போன்றன; மலரால் பெயர்பெற்றன முல்லைப்பாட்டும், குறிஞ்சிப் பாட்டும்; பொருளாற் பெயர் பெற்றது புறநானூறு; திணையால் பெயர் பெற்றன நற்றிணை, ஐந்திணை போன்றன; அடியளவாற் பெயர் பெற்றது குறுந்தொகை. ஆனால் செந்தமிழ்ச் சிலம்பாம் சிலப்பதிகாரமோ இவ்வகையில் எம்முறையானும் பெயரினை ஏற்காது, புதுவதாக - புதுமையாகப் பெயரினைக் கொண்டு விளங்குவதாகும்.

சிலப்பதிகாரம் செந்தமிழ்ப் பாவையின் சீர்மையையும் சிறப்பினையும் செப்புவதாகும். புகாரிலே கற்பின் செல்வியை மணக்கோலத்தில் காட்டி, மதுரையம் பதியிலே மறக்கற்பினளாய்க் காட்டி, வஞ்சிமா நகரில் அம் மறமகள் வழிபடும்விழுமிய நிலையினை எய்தும் ஏற்றத்தைத் தீட்டிக் காட்டிக்-கண்டு கேட்டு உணரும் வகையான் காட்சி நலமும் கருத்தின்பமும் தோன்றக் கண்ணகியின் கதையைக் காப்பியமாக்கிய இளங்கோவடிகள் இந்நூலுக்குக் 'கண்ணகி' எனப் பெயரிடாது 'சிலப்பதிகாரம்' எனப் பெயரிடுவானேன் ?

மறக் கண்ணகியின் வரலாறு சோணாட்டில் பிறந்து, சிறந்து, பாண்டி நாட்டில் பரந்து ஓடி-மரந்தன் நிலையைக் கடந்து நின்று' சேர நாட்டில் அருள்தரும் விழுமிய நிலையினைப் பெறுகின்றது; புகாரிலே பிறந்து சிறந்து, வாழ்ந்து வருந்தி; மதுரையிலே புகுந்து புலம்பிப் போராடி மறச் செல்வியாய் விளங்கி, வஞ்சியிலே அருளியும் வான் சிறப்பைப் பெறும் ஒரு கற்புக் கொழுந்தின் வரலாறே சிலம்பாகும். இங்ஙனம் மூன்று கண்டங்களில் முத்திறத்தளாகக் காட்சியளிக்கும் கண்ணகியின் கதைகூறும் காப்பியம் (மணிமேகலை போன்று) 'கண்ணகி' எனப் பெயரிடப்படாது 'சிலப்பதிகாரம் எனப்படுவானேன் ?

அடிகளின் குறிக்கோள் : பத்தினியைப் பாரோர் ஏத்தச் செய்தலன்றோ ? ('உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்' எனப் பதிகமும், கண்ணகியை முற் கூறினர்-பத்தினியை ஏத்துதல் உட் கோளாகலான்' என

அடியார்க்கு நல்லாரும் கூறுதல் காண்க). உலகிற் கோங்கிய ஒரு மாமணி தமிழுலகிற் கோங்கிய திருமா பத்தினியை உலகோர் ஏத்த ஒரு பெருங் காப்பியம் செய்த இளங்கோ அக்காப்பியத்திற்கு அப்பத்தினிப் பெருந்தெய்வத்தின் பெயரினையிடாது சிலம்பின் பெயரைச் சூட்டுவானேன் ?

அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் எனப் பதிகம்

பெயர்க் காரணத்தைச் சுட்டும் வழிநின்று ஆய்ந்தாலும் அஃது பொருந்துமாறில்லையே ! உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலுக்கும் சிலம்புக்கும் என்ன தொடர்பு ? ஒருவகைத் தொடர்பும் இல்லையே ! அதுதான் போகட்டும் என்றால் ஊழ்வினை உருத்து வந்தூட்டுதற்கும் சிலம்பிற்கும் தொடர்பேது ? கோவலன் கொலையாலும், மதுரை மன்னன் மாண்டதாலுமன்றோ ஊழ்வினை உருத்துவந்தூட்டுவதை உணர்கின்றோம். இஃது இங்ஙனமாக எங்கோ அடிக்க எங்கோ பல்போன கதையாக அனைத்தும் சிலம்பினாலேயே நிகழ்ந்தன-எனவே இந்நூல் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது என்பது எங்ஙனம் பொருந்தும்?

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதற்கும் சிலம்பிற்கும் ஓரளவு தொடர்பு இருப்பினும் காவலனைக் கண்ணகி வழக்கில் வென்றமைக்குச் சிலம்பு மட்டுமா காரணம்? கண்ணகியின் கண்ணீரும், கருங்குழலும் வடிவும் காரணமெனக் காட்டுகின்றனவே வழக்குரை காதை வெண்பாக்கள் ! இங்கும் இங்ஙனமாக சிலப்பதிகாரம் எனப் பெயரிட்டது ஏற்புடைத்தாமோ ?

இன்னும் சொல்லப்போனால் சிலம்பு இருந்து செய்த செயல்களை விட: சிலம்பு எரியப்பட்டபின்னர்-சிலம்பின்றி நடைபெறும் செயல்களன்றோ சிறப்புடையனவாக அமையக் காண்கின்றோம் : சிலம்பையுடைய செந்தமிழ்ப்பாவை இம்மியும் இன்பம் நுகர்ந்தாளில்லை, துன்பமும், துயரமும் மிக்கதாக அமைகின்றது அவள் வாழ்வு ! சிலம்பை ஏந்திய கோவலனே கொலையுறுகின்றான் ! அதனைப் பெற்ற பாண்டியனே மனைவியோடு மாள்கின்றான். இங்ஙனம் சிலம்பினை ஏற்ற நல்லோரெல்லாம் நலமிழக்கக் காண்கின்றோம். சிலம்பு இருந்து செய்த செயல்கள் இவை !!! செஞ்சிலம்பெறிந்து தேவி முன்னர் மாபெரும் பத்தினி வஞ்சினம் சாற்றியதோடு சிலம்பின் செல்வாக்குச் சீரழிகின்றது. அதன் பின்னரே கதையின் கொடுமுடியாம்-கதைக்கு ஏற்றம் தரும் இனிய காட்சியாம்-கண்ணகி விண்ணகம் செல்லும் காட்சியும், வரந்தரு மாட்சியும் நடைபெறுகின்றன. இஃது இங்ஙனமாக சிலப்பதிகாரம் எனப் பெயரிட்டது எங்ஙனம் பொருந்தும்?

காப்பியத் தொடக்கத்தில் கண்ணகியையே முதற்கண் அறிமுகப் படுத்தி அவளுடைய மணவினை, மனையறம் போன்றவற்றை விரிக்கின்ருர் சிலம்பாசிரியர். மாதவியின் மாண்பு பற்றிப் பேசும்போதுகூட காதல் வாழ்வையே கடுந்தவ வாழ்வாக்கி வாழ்ந்த அறச்செல்வியின் அவலநிலையினைக் காட்டுகின்ருர்; பிரிந்த கோவலன் பத்தினிப் பெண்ணை வந்தடைந்தது முதல் அனைவரும் கற்பின் செல்வியைப்போற்றக் காண்கின்ருேம்; கோவலன் கொலைக்குப் பின்னே செந்தமிழ்ச் செல்வியின் செயல்களே காப்பியத்தில் முழு இடம் பெறுகின்றன. இறுதியில்கூட வஞ்சி வேந்தனின் வெற்றி மேம்பாட்டில் ஈடுபட்டோமாயினும் மறவுணர்வும் வென்றிச்சிறப்பும் மிக்க செங்குட்டுவனே கண்ணகிக்குக் கற்கோயில் கட்ட முனைவதைக் காணும்போது செந்தமிழ்ப் பாவையின் சீர்மையை உணர்கின்ருேம். இங்ஙனம் காப்பியம் முழுதும் கண்ணகியே நீக்கமற நிலைபெற்றிருக்க அடிகள் உள்பட அனைவரும் அவள் புகழ் பாடுவதிலே ஏற்றமும் இனிமையும் காண்கின்றனர். இங்ஙனம் தொடக்கமுதல் இறுதிவரை கண்ணகியே நம் கருத்தை ஈர்ப்பதால் ‘கண்ணகி’ என்ற பெயர் ஏற்புடைத்தா என்ருல் அங்ஙனமுமில்லை.

‘கண்ணகி’ என்ற பெயர் கண்ணகிக்கும் காப்பியத்திற்கும் உள்ள இணைப்பையும் பிணைப்பையும் காட்டுமாயினும், கதைப்போக்கிற்கு-காப்பிய நிகழ்ச்சிகட்குச் சிலம்புபோல் காரணமாகின்றதா என்ருல் சிறிது தயங்க வேண்டியுளது. அன்றியும் அடிகள் நோக்கும் பத்தினிப் பெருந் தெய்வத்தின் பெற்றியை உணர்த்த விழைவதேயன்றி, நேரிடையாகக் கண்ணகி புகழ் இது எனச் சுட்ட விழைவதன்று. எனவே ‘கண்ணகி’ யினும் சிறந்த பெயர் அமைவதே சால்புடைத்து-சிறப்புடைத்து என்க.

காப்பியத் தலைவன் என்ற முறையில் ‘கோவலன்’ என்ற பெயர் அமையக் கூடுமா என்ருல் அதுவுமில்லை; கதை நிகழ்ச்சிக்கோ காப்பியச் சிறப்பிற்கோ எவ்வாற்ருனும் இன்றியமையாதவனுகவேனும் இருக்கின்ருனு என்ருல் அப்படியுமில்லை. **(He is not at all a dominating figure)** அடிகளும் அவனுக்கு உயர்வு தருமாறில்லை; நாமும் ‘கண்ணகியின் கணவன்’ கோவலன் என்ற காரணத்தாலேயே மதிப்பும் கொடுக்கின்ருேம்! இல்லையா? அன்றியும் கண்ணகியின்பால் அமைந்த பேரன்பிலும் பெருமதிப்பிலும் ஈடுபடும் நமக்கு இவன் நினைவே எள்ளளவும் இல்லையே! இங்ஙனமிருக்கக் கோவலன் என்ற பெயரும் எங்ஙனம் பொருந்தும்?

பின் ஏன் ‘சிலப்பதிகாரம்’ என்ற பெயர் பொருந்துமா பொருந்தாதா என்ற ஐயப்பாடு எழவேண்டும்? ஐயப்பாட்டிற்கு அடிப்படைக் காரணம்: சிலம்பின் இன்றியமையாமையைச் சிற்சிலபோது வற்புறுத்தாமல் செல்கின்

ருர் சிலம்பாசிரியர்-கோவலன் காற்சிலம்பை முதலாகக்கொண்டு புதுவாழ்வு வாழ விழைந்தன்றே மதுரைச் செலவை மேற்கொள்கின்ருன். ஆனால் ஆசிரியரோ,

வினைகடைக் கட்ட வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சீயா முன் (கனுத்திறம் 78-79)

எனக் கூறுகின்ருர். அதுபோன்றே சிலம்பின்றேல் கோவலன் கொலையுற நேர்ந்திராது; ஆனால் ஏனே இளங்கோவடிகள்,

காவலன் செங்கோல் வளையிய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்தென் (கொலைக்கள -216-17)

என வினைக்கு முதலிடம் தருகின்ருர். இங்ஙனம் சிலம்பின் சிறப்பினைக் காட்டாது ஊழ்வினைக்கு உயர்வு தருவதால் நாம் சிலம்பின், சிறப்பை, இன்றியமையாமையை அவ்வளவாக உணருமாறில்லை. அடிகள் இதை உணருமலும் இல்லை; சிலம்பின்பால் நம் உள்ளம் ஈர்க்கப்பெறின் கண்ணகி பால் நாட்டம் அவ்வளவாக நில்லாதொழியுமே என்ற எண்ணத்தால் கண்ணகிபால் கருத்தைத் திருப்புமாற்ருன்-ஊழொடு எதிர்த்துப் போராடிய மறமகளைச் சிறப்பிக்குமாற்ருன் சிலம்பின் சிறப்பை மறைத்து மேற் செல்கின்ருர். இங்ஙனம் சிலம்பின் சிறப்பு உணரப் பெருமையின் சிலப்பதிகாரம் என்ற பெயர்ப் பொருத்தம் பற்றிய வினு எழுகின்றதென்க.

இனி இப்பெயர் பொருந்துமாற்றை எண்ணுவோம் :

எந்த ஆடலும் பாடலும் கோவலனை மாமலர் நெடுங்கண் மாதவி பால் கூட்டுவித்ததோ அதே ஆடலும் பாடலும் அவனை அவளிடமிருந்து பிரித்தது. பிரிந்துவந்த கோவலன் கண்ணகியிடம் போந்தான். சலம்புணர் கொள்கைச் சலதியோடாடி குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைத்த சிலம் பொடு நாணுத் 'தருமெனத் தன் வறுமை நிலையினை வெளிப்படுத்தினுன். செவியேற்ற செந்தமிழ்ப் பாவையோ நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டி, 'சிலம்புள கொண்மின்' எனக் கூறினுள். இதனைக் கேட்டதுதான் தாழ்த்தம்

''சேயிழை! இதுகேள்; இச்
சிலம்பு முதலாகச் சென்ற கலனெடு
உலந்தபொருள் ஈட்டுத லுற்றேன், மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச்சென்று; என்னேடிங்கு
ஏடலர் கோதாய் ! எழுக '' (கனுத்திறம் 74-77)

எனக் கூறினன் கோவலன். சிலம்புளது கொள்க என்ற சொல் உளமுடைந்த கோவலனுக்கு உணர்ச்சியூட்டியது. அதனால்தான் பன்னெடுங் காலம் பிரிந்தமை பற்றிக்கூட ஏதும் பேசாது மனைவியின் சிலம்பினை முதலாக வைத்துப் பொருளீட்டி இழந்த பெருஞ் செல்வத்தைப்பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ விழைந்தான். இங்ஙனம் கோவலன் மதுரை செல்லக் காரணமாக - கருவியாக அமைந்தது சிலம்பு. சிலம்பின்றேல் பொருளீட்ட வாய்ப்போ-அவ்வெண்ணமின்றேல் மதுரை செல்ல வழியோ இல்லை-வழியின்றேல் கதையும் வேருக-காப்பியமும் மாருக அமைந்திருக்கும். எனவே புகார்க் காண்டத்தில் கதைப் போக்கை மாற்றும் மதுரைச் செலவிற்கு அடிப்படைக் காரணமாய் அமைந்த சிலம்பின் பெயரால் செந்தமிழ்க் காப்பியம் அமைவதில் வியப்பில்லையன்ரே?

அடுத்துக் கோவலன் கொலையுற இன்றியமையாததாய் அமைவதும் சிலம்பே! மதுரைப் பெருந் தெருவில் சிலம்பை விலைபேசி வருகின்ருன் கோவலன்; மாதேவியின் சிலம்பைக் களவாடி, தன் களவு வெளிப்படா வண்ணம் வகை செய்துவரும் பொற்கொல்லன்பால், தன் காவலன் தேவிக் காவதோர் காலணியை விலைபேச வல்லையோ எனக்கேட்க,கைவினைச்சிலம்பின் செய்வினை யெல்லாம் புரிந்து நோக்கிய பொய்த்தொழிற் கொல்லன் தன் குற்றம் மறைத்தற்கேற்ற இவ்வாய்ப்பினை இனிதே பயன்படுத்தி-காமமயக்கில் சென்ற பாண்டியனிடம் பகர்ந்த அளவிலே, மன்னனும் மாதேவியின் சிலம்பைக்கவர்ந்த கள்வனைக் கொன்று அச்சிலம்பினைக் கொணறுமாறு பணித்தான். இங்ஙனம் நிகழ-கோவலன் கொலையுறக் காரணமாய் அமைந்தது சிலம்பு, அங்ஙனம் அமைந்த சிலம்பை அடிகள் காப்பியத்தின் பெயராக அமைத்தமை பொருத்தமேயன்ரே?

கோவலன் கொலை நிகழவில்லையேல், கோமுறை கொய்தானைத் தீமுறை செய்யவோ-அதன் வழி கண்ணகியின் சிறப்பு வெளிப்படவோ வழியில்லை. இங்ஙனம் இன்றியமையாச் சிலம்பைக் காப்பியத் தலைப்புப் பொருளாகக் கொண்டது முழுதும் பொருந்துவதாகும்,

கோவலன் கள்வன் அல்லன் என்பதை எடுத்துக்காட்டியதும் இச் சிலம்பே! கண்ணகிக்குக் கைகொடுத் துதவியதும் இச்சிலம்பு ஒன்றே! இஃதொன்றே, "தான் செய்தது தவறு-பொன் செய் கொல்லன் தன்சொற் கேட்ட யானே அரசன் யானே கள்வன்" எனச் செழியனை உணரச்செய்தது. பழிகண்டு உயிர் துறந்தான் பாண்டியன்; கணவன் வழியே சென்ருள் கோப்பெருந்தேவியும். இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது சிலம்பே!

இதனை இளங்கோவடிகளே,

செஞ்சிலம்பு எறிந்து தேவிமுன்னர்
வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி,
சிலம்பின் வென்ற சேயிழை, எனவும்,

காவி உகுநீரும் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்-பாவியேன்
காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சி
கூடலான் கூடாயி னன்

மெய்யிற் பொடியும் விரிந்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் வையைக்கோன்
கண்டளவே தோற்றான் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர். (எனவும் கூறுவது காண்க.

இங்ஙனமிருக்கச் சிலப்பதிகாரம் எனப் பெயரிட்டது பொருத்தம் தானே!

காப்பியம் பிறந்த கதையினை ஆராயின் காப்பியப் பெயரமைதி நன்கு புலப்படும். கரவற்ற நெஞ்சமுடைய குறவர்கள் கண்டு கூறிய செய்தியும், சாத்தனார் கூறியமையுமே இளங்கோவடிகட்குக் காப்பியம் செய்தற்குரிய செய்திகளாக (SOURCES) அமைந்தன.

தீவினைச் **சிலம்பு** காரண மாக
ஆய்தொடி அரிவை கணவற்(கு) உற்றதும்,
வலம்படு தானை மன்னன் முன்னர்ச்
**சிலம்பொடு** சென்ற சேயிழை வழக்கும்,
**செஞ்சிலம்பு** எறிந்து தேவி முன்னர்
வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி
அஞ்சில் ஓதி அறிகெனப் பெயர்ந்து
முதிரா முலைமுகத் தெழுந்த தீயின்
மதுரை மூதூர் மாநகர் சுட்டதும் (காட்சி 69-77)

என்று சாத்தனார் கூறிய செய்தியில், தீதுதீர் மதுரை தீயுண்ணப்பட்டது ஒன்று தவிர ஏனை நிகழ்ச்சிகள் எல்லாம் சிலம்பினாலேயே நடைபெற்றன; எட்டே அடிகளில் மூன்றுமுறை சிலம்பு குறிக்கப்படுதலொன்றே இதற்குப் போதிய சான்றாகும். கற்கோயில் கட்ட முற்பட்டான் குட்டுவன்; சேரன் தம்பியோ சொற்கோயில் சமைத்துச் செந்தமிழ்ப் பாவையைப் பரவ முனைந்தார்-அவர் முனைந்த அளவில் அறிந்த செய்திக்கு அமைந்த அழகான தலைப்பு **சிலப்பதிகாரம்** அன்றி வேறு எது பொருந்தும்? காப்பியம் உருப்பெறுகின்றது.....

இதற்குள் இமயத்தில் கல்லெடுத்துக் கங்கைப் பேரியாற்றில் நீர்ப் படை செய்து கனக விசயர்தம் கதிர்முடிமேல் கல்லை ஏற்றிக் கொணர்ந்தான் குட்டுவன். இதற்கிடையில் முப்பதிரண்டு திங்கள் கழிந்தனவாகக் காப்பியத்தில் காணப்படுகின்றது. வானவனுடன் வந்த மாடல மறையோன், கண்ணகிக் கோயிலைக் காணவந்த தேவந்தி இருவருமே கோவலன்-கண்ணகியர்தம் வாழ்வின் முற்பகுதியைக் கூறியிருத்தல் கூடும். அவர் வாயிலாக அறிந்த பின்னரும் அடிகளுக்கு அனைத்தும் 'சிலம்பால் விளைந்த செயல்களே' என்ற துணிவு நிலைபெற்றிருத்தல் வேண்டும். எனவே இங்ஙனம் சிலம்பினின்றும் பிரிக்க இயலாது பின்னிப் பிணைக்கப்பட்ட கண்ணகிக் கதையைக் கண்ணுற்ற அடிகள் அக்காப்பியத்திற்குச் 'சிலப்பதிகாரம்' எனப் பெரிட்டதில் வியப்பில்லையன்றோ?

புகார்க் காண்ட நிகழ்ச்சிகளுக்கும் (மதுரைச் செலவு போன்றன) மதுரைக் காண்ட நிகழ்ச்சிகளுக்கும் (கோவலன் கொலை, கண்ணகி வழக்கில் வென்றமை போன்றன) சிலம்பு காரணமாய் அமைவதோடு அவற்றோடு ஒன்றிப் பிணைந்தும் செல்கின்றது-இங்ஙனம் இணைந்தும் பிணைந்தும் செல்லும் இரு காண்டங்களைக்கொண்ட காப்பியத்திற்குச்; 'சிலப்பதிகாரம்' எனப் பெயரிட்டது ஏற்புடைத்தும் ஏற்றமுடைத்தும் அன்றோ.

இறுதியாக இளங்கோவன் உள்ளத்தை உணர்தல் வேண்டும். காப்பியத்தை நுண்ணிதின் ஆராயின் அடிகளின் தலையாய நிலையாய நோக்கம் புலனாதல் கூடும். கற்பின் சிறப்பை-பொறுமையின் பெருமையைக் காட்டுமாற்றான் பத்தினி வழிபாட்டிற்கு வழிகோலுகின்றார் ஆசிரியர். அப்பத்தினிப் பெருவழிபாட்டால் பாரெலாம் உய்யும் என்பதைப் பத்தினிப் பெருந்தெய்வத்தின் பேரொளிக்கு முன்னே முடிமன்னரும் குடிமக்களும் அடிபணிந்தேத்தும் வியப்பினைக்காட்டி-ஏனையோரையும் ஒழுக்க நெறியில் செலுத்தும் சேரன் தம்பியின் திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது.

கற்பின் முடிமணியாம் கண்ணகியை-அடக்கத்தால் அமரருள் உய்ந்த அறச்செல்வியை-உயிரினும் சிறந்த ஒழுக்கத்தால் விழுமிய நிலையாம் விண்ணகம் சென்று சிறந்த மறக்குடி மகளைப் பணிந்தேத்துதல் சாலப் பொருந்தும் என்றெண்ணியே அத் தெய்வத்தின் காற்சிலம்பை நூற்சிலம்பிற்குப் பெயராக அமைத்தார் அடிகள். இதனை இளங்கோ தந்த இன் காப்பியத்தை ஆய்ந்தின்புற்ற அனைவரும் அறிதல் கூடும்.

இங்ஙனம் மறப்பெண்டிரை வழிபட அடிப்படைக் காரணமாக அமைவது சிலம்பு. அன்றியும் தெய்வத் திறம்பூண்ட கண்ணகியை வணங்கும் வாயில் அவள் தாள் பணிந்தேத்துவதே. இங்ஙனம் அவளை உயர்த்திய சிலம்பை-நாளும் நினைந்துருகச் செய்யும் காற்சிலம்பை நூற்சிலம்பிற்குப் பெயராக இட்டபெருமை அடிகட்கே உரியது. இம்முறையிலும் சிலம்பின் சிறப்புறப் பொருந்துவது காண்க.

துன்பம் மிக்க புவிச்செல்வத்தை மறந்து துறந்து இன்பமேமிகுந்த கல்விச்செல்வத்தை நாடிநின்ற நம் அடிகள்-பத்தினிப் பெருந்தெய்வத்தைப் பரசல் வேண்டுமென விரும்பிய அந்தமில் இன்பத்து அரசாள்வேந்தர், துறவறத்தால் பெறவியலா பெருஞ் சிறப்பை இல்லறத் தூய்மையாலேயே பெற்ற செந்தமிழ்ப்பாவையை,செய்தவக் கொழுந்தை-பத்தினிப்பெண்ணைப் பெயரால் அழைக்க அஞ்சித் தமிழ் மரபிற்கே உரிய பண்பால் (கால்) அடி கண்டு பணிந்து அமைகின்றார், அகமகிழ்கின்றார். அடிபணிந்து அவளருள் பெறுமாற்றான் படிப்போரையும் ஆற்றுப்படுத்துமாற்றான் அடிச் சிலம்பையே காற்சிலம்பையே நூற்சிலம்பிற்கும் பெயராக வைத்து வணங்கச் செய்கின்றா ரெனின் இளங்கோவின் நெஞ்சத் தூய்மையை-பெண்ணடி போற்றும் பெற்றியை என்னென்பது? என்னே இளங்கோவின் கனிந்த உள்ளமும் கரவற்ற நெஞ்சமும்!

இதுகாறும் கண்டவற்றால் பெருங்காப்பியப் பெயரமைதியின் பாங்கினையும், கண்ணகியின் புகழ்பாடும் காப்பியத்திற்குக் கண்ணகி என்ற பெயர் அமையாததேன் என்பதையும், பதிகம் கூறும் பெருநோக்கங்களுக்கும் சிலம்பிற்கும் தொடர்பேதுமில்லையே என்றும், வேறு தக்க தலைப்பு தரப்படாததேன் என்றும்; பொருத்தமின்மை தோன்றுவானேன் என்றும், இறுதியாகச் சிலம்பே மதுரைச் செலவு, கோவலன் கொலை, காவலனை வழக்கில் வென்றமை, போன்ற இன்றியமையா நிகழ்ச்சிகட்குக் காரண மாகின்றதென்றும்; காப்பியம் பிறந்த கதையும் காற்சிலம்பிற்கே தனித்தன்மை தருகிறது என்றும், பத்தினிப் பெருந் தெய்வத்தை ஏற்றிப்போற்றும் இனிய முறை அவளடி பணிந்து.தாளில் திகழும் காற்சிலம்பைத் தொடுவதே என்றும் கண்டோம்.

கண்ட நாம் காற்சிலம்பு நூற்சிலம்பிற்குத் தலைப்பாகத் திகழும் திறத்தையும், காற்சிலம்பால் நூற்சிலம்பு பிறந்த பாங்கினையும் எண்ணி, காற்சிலம்பு தந்த நூற்சிலம்பைக்-காற்சிலம்பால் பெயர்பெற்ற நூற் சிலம்பாம் **'சிலப்பதிகாரத்தையும்'** அங்ஙனம் ஆழ்ந்து நோக்கிப் பெயரிட்ட **இளங்கோவையும்** என்றுமுள தென்தமிழால்,தேன்தமிழால் ஏற்றிப் போற்றுவோமாக!

o o o o o

# உள்ளம் பேசுகின்றது !

உள்ளம் பேசுகின்றது!

பெருகியோடும் உணர்வு என்னை நெருப்பாய்ச் சுடுகின்றது. என் உடலில் ஓடும் குருதியில் வெப்பம் குமிழியிடுகின்றது. நான் காணும் பொருள்களின் மேல் வீசும் அனல் காற்று அப்பொருள்களை எரித்துப் புகைத்துவிடுமோ என்று அஞ்சுகின்றேன்.

நீர்ச்சுழலில் எதிர்பாய்ந்தோடும ஒரு மீன்போல் வாழ்க்கை நிலையில் என் உள்ளம் எதிர்ந்தோடுகின்றது.

அன்று தோன்றி மறைந்த மக்கள் இனத்து முதல் மாந்தன் இன்று பிறந்தால்........?

'வாழ்க்கையில் உள்ள ஒளியும், 'ஒழுக்க உணர்வும், மெய்மை நிகழ்வுகளும் மிகமிகத் தேவை' என்று, அன்று பேசிய மெய்யுணர்வு அறிஞரும். அருளாளரும் தாங்கள் உறங்கும் அயர்ந்த துயிலினின்று எழுந்து இன்றைய உலகை நோக்குவாரானல்.....?

நூல் நிலையங்களில் குவித்து வைத்துள்ள தூசிபடிந்த கணக்கற்ற சுவடிகளை, வாடைக்கு நடுங்கும் ஒளிவிளக்கிலும், கொல்லும் பசியொடும், வலிந்து அணைத்துக் கொண்ட வறுமையொடும், பாதையோரங்களிலும், சோலைகளிலும், ஒளிவராத இருட்டறைகளிலும், [illegible]ற்று அசையாத மூ[illegible] முடுக்குகளிலும் இருந்து; எலும்பை எ[illegible]கி, குருதியை [illegible]கி, தன் உடம்புத் தோலைத் தாளாக்கி, இ[illegible]கள் [illegible] உ[illegible]தற்கான வழிகள் இவையிவை என்று தாம் கண்டனவற்றைய[illegible] கேட்[illegible]னவற்றையும் ஒன்று விடாமல் எழுதிப்போனர்களே, அந்தக் கலைஞரும், புலவரும், அறிஞரும், எழுந்துவந்து நாகரிக நாற்றமடிக்கும் வீதிகளில் உலவுவார்களானல்..,?

ஏ உள்ளமே! நீ அவர்தம்மைக் காணவும் நடுங்குவாய்! அவர் வருகின்ற பாதைகளில். நீ நடந்து செல்லவும் அஞ்சுவாய்!

வானுயரப் பறக்கும் உன் நாகரிகக் கற்பனைகளுக்கும், மக்களை மக்களாக்க அவர் கண்ட வாழ்வின் பேருண்மைகளுக்கும், எத்தனை வேற்றுமை மாற்றங்கள் !

பெண்களைத் தாய்களாகவும், தெய்வங்களாகவும் போற்றிய அவர் தூய்மை அன்பிற்குமுன், நீ அவர்தம் பெருமைக்கு வித்திடுவதாகப் பேசும் கணக்கற்ற பேச்சுக்கள் நிலைகுலைந்து பொடிப்பொடியாய் மாய்ந்து போகும்!

உன் சிற்ப எண்ணங்களுக்கும், கற்பனைப் பேச்சிற்கும் அவர்தம் உண்மை விளக்கங்கள் இருள் மண்டிக் கிடக்கும் படுகுழிகளை முடிவெனக் காட்டி நகைக்கும்-

உள்ளமே! உணர்வின் வெள்ளமே!

காலையிலிருந்து மாலைவரை நீ உனக்கு எத்துணை நன்மைகளைச் செய்து கொண்டாய்! நீ மற்றவர்க்காகச் செய்தது என்னை?

உன் வாழ்வின் முழு நோக்கம் எதுவென்று கண்டு உன் கால்கள் நடையிடுகின்றனவா?

வாழ்வின் முதற்படியில் நீ கால் வைக்கும்போது நீ அடையப் போகும் கடைசிப் படி, உன்னை எங்குக் கொண்டு போய் விடும் என்பதை நொடியாகிலும் எண்ணினையா?

நீ காலெடுத்து வைத்த பக்கமெல்லாம் பூஞ்சோலையும், பசும் புற்றரையும் உன் மென்மையான அடிகளுக்கு இன்பமான நடைசேர்க்கும் என்று நீ எண்ணியிருந்தால் அதை உடனே மாற்றிக்கொள்.

பொருள் வருவாய் ஒன்றையே வாழ்வின் இலக்காகக் கொண்டு, மக்கள் விரும்புவனவற்றையும், விரும்பாதனவற்றையும் பேசிப்பேசிக் காற்று மண்டலத்தை பொய்மை நாற்றமடிக்கச் செய்யும் இன்றைய சீர்திருத் தக்காரரின் நோக்கும், போக்கும் உன்னை எங்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதை நீ உணரமுடியாது.

சுற்றிலும் அறிவின் வியப்பான வளர்ச்சியை எண்ணி எண்ணி, நீ பூரித்துப் போவது, அடியில் கனல்கின்ற நெருப்பின் சூடு பட்டுப் பொங்கி, வழியும் பாலை எனக்கு நினைவூட்டுகின்றது. வற்றக் காய்ந்து சுண்டிப் போகும் அதன் நிலை இரங்கத்தக்கது.

ஏ, உள்ளமே!

உன் அலைவுகள் பல!
உன் கோலங்கள் பல!
முன் நினைத்ததைப் பின்னால் விலக்குவாய்!
பின் நினைப்பதை முன்னால் வெறுத்திருப்பாய்!

வான்கிழிய ஓலமிடும் வான் கப்பலும், ஊர்கிழிய ஊசலிடும் புகை வண்டியும், வீதி கிழிய இரைந்து செல்லும் நெய்யியங்கியும் உன்னை உயர்ந்தவனாக ஆக்கிவிட முடியாது.

பூச்சியினும், புழுவினும் பறவையினும், விலங்கிலும் நீ விரைந்து போவதையும், விரைந்து உண்ணுவதையும், குதித்து மகிழ்வதையும் உன் முன்னேற்றம் என்று எண்ணிவிடாதே!

கண்ணுக்குப் புலனாகும் வளர்ச்சிப் பொருள்களின் எண்ணிக்கையின் அளவு உன் கருத்துக்கள் வளர்ந்திருக்கின்றனவா பார்!

அறிவு எட்டிப்பிடித்த நாகரிக முதிர்வை, உன் உள்ளம் தொடுகின்றதா என்பதைப்பற்றி நீ மிகுவாக எண்ணல் வேண்டும்.

தீப்பந்தத்தை எடுத்துச் செல்லும் ஒருவன் தண்ணீரையும் உடன் கொண்டுபோவது நல்லது!

முந்திப் போகின்றவன் குதிரையின் கடிவாளம், பிந்தி இருப்பவனின் கையில் இருத்தலில் பயனில்லை.

அறிவின் மீது ஊர்ந்து செல்லும் உன் வாழக்கை, உள்ளத்தைப் புறக்கணிக்கக் கூடாது!

அறிவு நெருப்பு!
மிகினும் குறையினும் கேடு செய்யும்.

அறிவு மின்னல்!
ஊரையும் உலகையும் கொளுத்தலாம்.

அறிவு காற்று!
தென்றலாயும் புயலாயும் மாறலாம்.

ஏ உள்ளமே!

சுழித்தோடும் அறிவுப் படகுக்கு உள்ளத்தின் துடுப்புக்கள் தேவை!

வாழ்க்கைச் சூறுவளியில், மாந்தர் பயணம நொறுங்கிப் போகாமல் உள்ளமே நீ வழியமைத்துக் கொடு.

நீ என் வாழ்வின் கைவிளக்கு.

— மெய்மைப்பித்தன்

முழுப்பாடல்.

# காளாம்பி

- துரை. மாணிக்கம் -

[அறிவு தழுவாத வெற்றுணர்ச்சிக்கு அடிமைப்பட்டுச் சுழலும் உள்ளம், உறுதியில்லாமல் பொது பொது வென்றிருக்கும் குப்பைப் புழுதிக்கு ஒப்பாகும். எப்பொழுதாவது பொழியும் உணர்ச்சி மழையி ஞல் அங்கு முளேக்கின்ற **காளாம்பிகள்** பிறர்க்கு அருவருப்பையும், ஏளனத்தையும் உண்டு பண்ணுகின்றன.

வேரற்ற அவ்வெற்றுணர்வு நிகழ்ச்சிகள் திடீரென வெழுந்து நின்று சிறுபொழுது மாந்தனை ஆட்டிப் படைத்து உடனே மறைந்து விடுவன வெனினும், அவை மற்றவர்பால் ஒருவர்க்கு மாருக் கறையைப் பதிக்கின்றன.

சிறிது நேரமே எழுந்து நிற்கும் அவ் வெற்றுணர்ச்சிகள் குப்பை மேட்டுக் காளாம்பிகளைப்போல் பூப்பதுமில்லை; காய்ப்பதுமில்லை, சிம்பும், கொம்பும், தளிரும், தழையும் விட்டுப் படர்வதுமில்லை. அந்தச் சிறு நேரத்து வெற்றுணர்வுக் காளாம்பிகளைப் பிடுங்கி யெறியவல்ல அறிவாற்றல் உள்ளவர், என்றும் சிறந்த ஒழுக்கமுடையவராய் இருப்பது திண்ணம்.

சூழ் நிலை யென்னும் கார்முகிற் கூட்டம், வாய்ப்பு என்னுங் குளிர்காற்றைத் தீண்டி, வெற்றுணர்ச்சி மழையைப் பொழிவிக்கும் பொழுது வன்மையற்றிருப்பார் தம் உள்ள நிலத்தில் தீய எண்ணம் என்ற காளாம்பிகளைத் தோற்றுவிக்கின்றது. இத்தகைய காளாம்பிகளை முளையிற் கிள்ளி யெறிவோர், அவ் வெற்றுணர்வுக் கனலவிந்து, அறிவுப் புனல் சிலிர்க்குங் காலை, தாம் செய்ய விருந்த தீய செயற்கு மிக வருந்துவதும், அவ்வாறு செய்யாமற்றப்பி ஒழுக்கத்தைக் காத் தமைக்கு உள்ளம் உவப்பதும் கண்கூடாகக் காண்கின்ரும். அத் தகைய வெற்றுணர்ச்சிக்குப் பழுதாகாமல் ஒழுக்கங் காப்பார் உயர்ந் தோராவர். மற்றையோர் விலங்குகளே ஆவார்.]

ஏந்திய நெஞ்சன்! இளங்கதிர் முகத்தன்!
நீந்திய கருவிழி, காந்திய நோக்கினன்!
எடுத்த மூக்கினன்! எழில்மலர் வாயினன்!
தொடுத்த முத்தெனத் தோன்றிய பல்லினன்!
வீங்கிய தோளான்! வீழிருங் கையான்!
தேங்கிய அழகெலாந் திரண்ட உருவிலோர்க்
கட்டிளங் காளையன் ஒருவன், கலையெனும்
மட்டிலா உவகை மாந்திய வாழ்வினன்.
வெள்ளி நிலவொளி வீழ்த்திய குளிரில்
நள்ளிராப் பொழுதில் நன்னடை பயின்றே
அண்டையில் உள்ள அழகிய புகைத்தொடர்
வண்டி நிலையம் வந்துநின் றிருந்த
படுங்கிடை வண்டியைப் பற்றியுட் சென்றே
இடங்கண் டமர்ந்தான்; இரைந்தது வண்டி!

முன்னால் ஒருத்தி மொய்த்த எழிலொடும்,
சின்ன மகவின் சிறுதலை அணைத்த
வகையொடும், புன்னகை வளைந்த வாயொடும்
முகைவிழி மூடி, முழுவுடற் கிடத்தி,
அறுவர் அமரும் அகலப் பலகையில்
ஒருவர்க் கமர இடம் ஒதுக்காமல்
தூங்கி யிருந்தாள்; தோகையின் முன்னே
தாங்கிய கைமேல் தலையினைச் சாய்த்தே
உறங்கினர் ஒருவர், உள்ளிருந் தெவரும்
இறங்க வேண்டுதல் இல்லா மையினால்
அவரவர் அமர்ந்தே அயர்ந்து தூங்கினர்
இவர்தம் நடுவில் இமை மூடாமல்,
முன்னால் இருக்கும் முத்துச் சிலையை
உன்னி உன்னி உருக்குலைந் திருக்க
மன்னிய நினைவால் மலைப்பொன் றெய்தினன்
பின்னால் வந்த பெருங்கலை நெஞ்சன்!

ஓடிய வண்டியின் உரத்த ஊதலும்,
ஆடிய ஆட்டமும் அதன்மருங் குறங்கிய
மகவை எழுப்ப, மங்கையும் விழித்துத்
தகவோ டணைத்துத் தலைநிமிர்ந் திடவே,

முன்னால் அமர்ந்து மொய்விழி நோகத்
தன்னைப் பார்க்கும் தனியனைக் கண்டாள் !
கண்டதும் பாம்பைக் கண்டது போலப்
பண்டை நிகழ்ச்சி பாவையை உலுக்க
நெஞ்சு பதைத்தாள்; நெட்டுயிர்ப் புற்றாள் !
அஞ்சு மடமான் அரிமா முன்னம்
உடல்நடுங் கிடல்போல் உயிர்நடுங் கினளே !
அடலே றவனும் ஆழ்ந்துளம் உன்னத்
தொன்மை நினைவு பற்பல தோன்றி
முன்னை நிகழ்வில் மூழ்க்கி யெடுத்ததே

o o o

ஓவியப் பாவையை ஒருநாள் கண்டதும்
ஆவியைத் தந்தவள் ஆவியைப் பெற்றதும்,
பொன்னங் குரும்பைப் பொலிகுலை தொங்குந்
தென்னந் தோப்பில் தெரிவையைத் தொட்டதும்,
ஆற்றுப் படுகையில் ஆழத் தோண்டிய
ஊற்றுப் புனலை யவட்கூட் டியதும்,
நெய்விட் டளவிய நொய்க்கொழும் பொங்கல்
கைதொட் டளவி கன்னிவாய் தந்ததும்,
பல்லை முத்தாய்ப், பவளமாய் இதழைச்
சொல்லி மகிழ்ந்ததும், சுருள்குழல் அலைத்ததும்,
காத்திருந் தாளின் கண்களைப் பொத்திப்
பூத்த முகத்தைப் பார்த்து மகிழ்ந்ததும்,
சிறுகை பற்றிச் சிவக்கக் கிள்ளி
ஒருநா ளாகிலும் உனைமற வேனென்
றுரைத்த காட்சியும், ஒண்டொடி முகமலர்
மறைத்த அழகையும், மகிழ்ந்த வகையையும்,
அடிக்கிளை மாங்காய் அவள்தரக் கேட்க
நொடிப்பொழு துச்சிக் கனிநா றுகுத்ததும்
நன்மணல் ஈாக நறுங்கனி பொறுக்கிப்
பின்னெழ இருவரின் பெருந்தலை இடித்ததும்,
முத்துப் பல்வரி முறுவல் காட்டி
"அத்தான்!' என்றவள் ஆயிரஞ் சொன்னதும்
விண்ணில் தூங்கிய வெண்ணிலா வொளியில்
மண்ணில் ஆற்று மருங்கினில் அயர்ந்ததும்,

மேட்டுப் பாலையில் உண்ணீர் விடாய்க்கவன்
ஆட்டுப் பாலை அங்கையிற் கறந்து
செவ்விதழ் பருகத் தந்ததும், சேயிழை
அவ்விதழ் பருக அவற்குத் தந்ததும்
நீட்டிய கையில் மலர் நிறைக்காது
காட்டு மல்லிகை குழலில் வைத்ததும்,
கருமுகில் புதையும் கவின்நிலா வெனஅவள்
திருமுகம் புதைத்தவன் திருமடி புரண்டதும்,
ஓடிய புனலில் ஒண்டொடி யோடே
ஆடிய வகையும் அவள்தலைப் பற்றி
உள்ளே மூழ்க்கி உடன்நீர் புகுந்ததும்,
வெள்ளத் தவள்செல விரைந்து மீட்டதும்,
தங்கைக் கன்னை தந்ததைக் கவர்ந்து
மங்கைக் கணிந்த மணிமுத் தலங்கல்
இன்னும் கழுத்தினின் றிறங்கா திருப்பதும்,
பொன்னந் தாலியோன் றதனொடு பொலிவதும்,
ஆடியும் பாடியும் அன்பை வளர்த்ததும்,
ஓடிய காலத் துறும்பிரி வாலும்,
பொல்லா மாந்தர் புலைநெஞ் சாலும்
கல்லாப் பெற்றோர் கருத்திழப் பாலும்,
ஒருகுலை இருகனி, ஒருநோக் கிருவிழி,
ஒருசெயல் இருமனம், ஒருயிர் ஈருடல்,
பிரிக்கப் பட்டதும், பிரிவெனும் உரலில்
நெரிக்கப் பட்டதும், நினைவெனும் புனலில்
சிக்கித் தவித்ததும், காதல் சிதைத்ததும்,
மக்கிய நினைவுகள் மலர்ந்து மீண்டதும்,
எண்ணி எண்ணி யிருவரும் நினைவறக்
கண்ணீர் உகுக்க, காதகம் கனல,
தொண்டை வரள, தொன்மை உணர்வெழ
அண்டைச் சூழலை அடியொடு மறந்தே
ஒருவர் விழிகளை ஒருவர் கவ்வி
ஒருவர் உணர்வை ஒருவருக் குணர்த்தி,
அவிந்த தீயெழுந் தாடிய வகையாய்க்
குவிந்த அமைதியில் உள்ளங் கூடிட,

விரும்புவ ளென்றும், விரும்பியப் பக்கந்
திரும்புவ ளென்றும், திரும்பியோர் புன்னகை
அரும்புவ ளென்றும், அணுகுவள் என்றும்,
கரும்பவள் தனக்கினி என்றும் கருதி

உயிர்தீப் பற்ற உளந்தீப் பற்ற
மயர்வறி யாமல் மணந்தவள் என்ற
நினைவறி யாமல், நிலையறி யாமல்,
வினையறி யாமல், விளைவறி யாமல்
உறுத்து நோக்கியவ் வொண்டொடி உளத்தையும்
அறுத்தறுத் தெறிந்திட, அக்கொடி யாளும்,

முன்னர் தனக்கவன் முகமலர் உவந்ததும்,
புன்னகை தந்தவன் புன்னகை பெற்றதும்
நீட்டிய கைகளில் நிலையிலா தோடிக்
கூட்டி லடைபடும் குருவிக் குஞ்செென

அடைபட் டிருந்ததும், அதனால் மகிழ்ந்ததும்,
இடைப்பட் டிருந்த இடர்களை எதிர்த்ததும்,
குன்றுதோள் தன்னிற் றன்முகம் குழைந்தவள்
மென்றோள் கனப்பின் மிசையவன் துயின்றதும்

பாலிற் பிசைந்த பைங்கொழு வடிசில்
வேலி மருங்கில் வீற்றவற் கீந்ததும்,
ஆற்றுப் படுகையில் அவன்காத் திருக்கச்
சோற்றை இலையொடு சுருட்டி மறைத்தே
அன்னை உணரா ததனை எறிந்ததும்,
பின்னை யவனிடம் ஓடிப் பிணைந்ததும்,
மறப்பா யோவென மறித்துக் கேட்டவற்
'கிறப்பே' னென்றவள் இளங்கை யடித்தும்,
'தடுத்தார் பெற்றவர்; தனைவா ழாது
கெடுத்தார்' என்று கிளத்தி நொந்ததும்
வீட்டுக் குள்ளறை விட்டவள் அன்னை
கூட்டுக் கிளியெனக் கொடுஞ்சிறை காத்ததும்,
வந்தவன் ஒருவன் தன்னொடு வாழெனத்
தந்தவள் கழுத்தில் தாலியேற் றியதும்,
தன்னை விழைந்தவன் தன்னை மறந்து
தன்னை மணந்தவன் தன்னை விழைந்து

வாழ்வதைத் தவிர வழியே றன்றென
ஆழ்ந்துணர்ந் ததன்படி அதுவரை வாழ்ந்ததும்,
இறந்தா னென்றே எண்ணி யிருந்ததும்,
பிறந்தான் போலவன் பின்னை வந்ததும்,
முனையுரி மையினுல் மூண்டெழுந் துள்ளம்
தனையறி யாமல் தவியாய்த் தவிப்பதும்,
முன்னி நெஞ்சினில் முன்னிகழ் வெல்லாம்
மின்னித் தோன்றிட மேனி கனப்ப,
இழந்ததைக் கண்ட இரப்பா ளன்போல்,
குழந்தை அரற்றுங் கூக்குரல் மறந்தும்,
கண்முன் உறங்கும் கணவனை மறந்தும்,
பெண்முன் னிற்கும் பெரும்பழி மறந்தும்
அற்றைநாட் பழகிய அன்னவன் முகத்தை
உற்றுப் பார்ப்பதும் உயிர்த்தலும் உணர்வெனும்
எரிமூண் டெரிய எண்ணெய் விடல்போல்
விரிந்த பார்வையில் விளைந்த நினைவால்,
அறிவு சுருங்கி அகமிகச் சுருங்கி
வெறியுணர் வெழும்ப, வியர்வுடல் அரும்ப,
தன்னை மறந்துயிர் தளர்வுற் றிருந்தாள்.
என்னை இயம்புவ தென்றவள் எண்ணி,
நாத்துடி துடிப்ப, நடுங்கிட நெஞ்சு,
காத்த ஒழுங்கு கழன்றுயிர் அலைய
அவனுளம் உள்ளிய ஆயிரஞ் சொற்களில்
தவறியு மொருசொல் தங்கா வுரையா(து)
குரல்வளை நடுங்கக் குமைந்தவன் றனக்கு
விரல்நெளி வாலே விழைவினை உணர்த்த
எண்ணினள்; கைகள் இரும்பாய்க் கனத்தது.
திண்ணின விரல்கள், திகைத்து நின்றனள்
பேசத் துடித்தது பேதையின் பழவாய்!
ஊசல் மூச்சும் ஒடுங்குவ தல்லால்,
சொல்வர வில்லை; சுடர்மின் னென்று
வல்நெஞ் சொளிர, வல்லுணர் வொடுங்கிடச்

சென்ற வண்டியிற் பட்டுச் சிதைந்த
தென்றற் காற்றால் தெரிவையின் முகத்தில்
வரவரத் தெளிவு வளர்ந்ததும் உள்ளப்
பரபரப் படங்கிப். பாலுக் கழுதே,

இமைகள் மூடி இளமக வுறங்க
தமைமறந் தந்தத் தாய்முலே ஊறி,
நெஞ்சகம் நனேப்ப. நெடுந்துயில் நீங்கி,
அஞ்சிய மடக்கொடி அறிவு தெளிவுற,

ஒருநொடி அவிந்த உள்ளுணர் வெழுந்தே
ஒருகொடு நினேவை ஊட்டி மறைந்த
நிகழ்வை எண்ணவும் நேரிழை அஞ்சி
இகழ்வா ளாயினள் இளமையை! அக்கால்,
கையணேத் துறங்கிய கணவன் பெருந்தலே
கையணே நழுவிக் கடிதென வீழ்ந்து
பலகணி விளிம்பிற் படாலெனப் பட்டதும்,
தலேபுடைத் தெழுந்தான்; தளிர்கொடி மருண்டே
'அத்தான்' என்றே அலறினள்; அவனே
சொத்தை அடியெனச் சொல்லிச் சிரித்தான்.

○ ○ ○

மாண்ட காதலே மீண்டும் நினேத்தவன்
ஆண்ட பேருணர் வகன்றிட வருந்தி
நிகழ்ந்திட விருந்த நெறியிலாச் செயலே
இகழ்ந்து கொண்டனன்! இணேயிலா தாண்மை
அன்னவன் தோளே அணேத்தது கண்டீர்!
பின்னர் ஓடிய பெரும்புகை வண்டி
நிலேயம் ஒன்றில் நின்றதும், அந்த
விலேயிலா ஒழுங்கினன் விரைந்தெழுந் திறங்கினன்.
பெண்ணுள் கடைவிழி பிறந்தது ஒருதுளிக்
கண்ணீர்! இதனேக் கண்ட கணவன்
'நிலேகலங் கிடலேன் நீ' யென அவளும்
தலேயில் வல்லடி தாங்கினீர்' என்றுள்.
ஒருநொடி ஓய்ந்த உள்ளம் போலப்
பெரும்புகை வண்டி பின்னும் பறந்ததே!

○ ○

---

## மரமும் விலங்கும்.

அறிவு கொழுத்து உணர்ச்சி குன்றியவர், மரம் போன்றவர்; அறிவு குன்றி உணர்ச்சி மிகுந்தவர் விலங்கு போன்றவர்.

மு. வரதராசனுர்.

# பேச்சோ பேச்சு.

○

நம் நாட்டவர்க்கோ அறிவாராய்ச்சி யில்லாமையோடு, ஒற்றுமைக் குணமும் இல்லை. தமக்குத் தன் மனைவி மக்களும், நெருங்கிய உறவினருமே உரியவரெனவும், மற்றை யோரெல்லாந் தமக்கு வேறனவரெனவுந், தாமுந் தம்மினத்தவரும் நன்றாயிருத்தலே தமக்கு வேண்டுந் தம்மவரல்லாத பிறர் எக்கேடு கெட்டாலென்ன, எத்தெருவே போனாலென்ன என நினைத்துப், பிறர் நலத்தைச் சிறிதும் கருதாதவர்களாய் இருக்கின்றனர். தன்னலங் கருதும் இப் பொல்லாத எண்ணத்தால் இத் தமிழ் நாட்டவருக்குட் பிரிந்திருக்கும் அளவிறந்த சாதிகளும் அவற்றால் விளைந்திருக்கும் அளவிறந்த வேற்றுமைகளுங் கணக்கிட்டுச் சொல்லல் இயலாது. நாலுபேர் ஒன்று சேர்வார்களானல் சாதிப் பேச்சும், பெண் கொடுக்கல் வாங்கலைப் பற்றிய பேச்சும், அவன் சாதி கெட்டவன், அவனுக்கும் நமக்கும் உறவு கிடையாது, எங்க சாதி உயர்ந்தது, எங்கள் சாதியில் ஒடித்தாற் பால் வடியும், எங்களிற் பக்கத்து வீட்டுக்காரரோடுதாம் நாங்கள் கலப்பது வழக்கம், மற்றவர்கள் கையில் தண்ணீர் கூட வாங்கமாட்டோம் என்னும் பேச்சும், அதை விட்டாற் பொருள் தேடும் வகைகளைப் பற்றிய பேச்சும், அதுவும் விட்டால் தமக்குப் பொருள் சேருக் காலத்தைப்பற்றியும், நோய் தீரும் நேரத்தைப்பற்றியும், மணம் ஆகும் நாளைப்பற்றியும், எந்த இடத்திற்குப் போனாற் குறி கேட்கலாம், எந்தத் தெய்வத்துக்கு ஆடு, கோழி அறுத்தால் இவை கைக்கூடும்? மாரியைக் கும்பிடலாமா? மதுரை வீரனைக் கும்பிடலாமா? காளியைக் கும்பிடலாமா? என்னுஞ் சிறு தெய்வச் சிற்றுயிர்க் கொலைக் கொடும் பேச்சும், தனக்குப் பகையானவனைப் பலவகையால் இழித்துத் தன்னைப் பலவகையால் உயர்த்துச் செருக்கிப்பேசும் பேச்சுமே எங்கும் எவ்லோரும் பேசக் காண்கிறோம். புகை வண்டிகளிலும் இந்தப் பேச்சே; பொதுக் கூட்டங்களிலும் இந்தப் பேச்சே; கோயில்களிலும் இந்தப் பேச்சே; குளக்கரைகளிலும் இந்தப்பேச்சே!

**. மறைமலை அடிகள் "அறிவுரைக் கொத்து."**

பாட்டு, செய்யுள் முதலியன இயற்றித்தரும் புலவர். சட்டம் இயற்றும் மெய்யறிஞரைவிட (Philosophers) ஆற்றல் மிக்கவர்.

**- சே. சி. சைர்ஃப்.**

((Aspect of poetry P. 105)

○ ○ ○

பாட்டில் உளள சொற்கள் ஒரு பொருளை விளக்கவில்லை; அந்தப் பொருளையே நம் உள்ளத்தில் படைக்கின்றன. **எல். ஆபர் குரோம்பீ.**

(The Idea of Great Poetry. P. 20)




## சிறப்பு

பன்மொழியும், பல்சுவையும், பல்துறையும் நாடோறும்
தென்மொழியாற் காணும் சிறப்பு. - புலவர். ந. பார்த்தசாரதி
மதுரை - 4

## பாராட்டுகின்றேன்

தங்கள முயற்சிகளைப் பாராட்டுகின்றேன்.... 'தென்மொழி' ஒரு இலக்கிய இதழாகவே இயங்குவது நன்று......ஊ. செயராமன் ,சென்னை-1

## நன்முத்து

''தென்மொழி' தமிழுக்குக் கிடைத்த நன்முத்து. இதைத் தமிழுக்குத் தந்த உங்களுக்கு எதிர்காலம் புகழைச்செய்யும்; தமிழ்க்குலம் கைகூப்பும்... யாரும் துணிந்து செய்யாத செயலைச் செய்துவிட்டீர்.... என் நெஞ்சுகந்தத் தென்மொழிக்கு எதையும் செய்யக் காத்திருக்கின்றேன்.

- புலவர், புனலன்.
உள்ளிக்கோட்டை, தஞ்சை.

## கருத்துக் கருவூலம்

'தென்மொழி' கருத்துக் கருவூலம்; செந்தமிழ்த் தென்றல் வீசும் இலக்கியப் பூங்கா;.... தமிழ் மணம் கமழும் இவ் இலக்கியப் பூங்காட்டினை, தமிழன்பர்தம் உள்ளங்கள் வரவேற்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம்...... - அருட்செல்வன். பொள்ளாச்சி.

## பார்க்கப் பதினுயிரம் கண்கள்

'தென்மொழி' இலக்கிய மணங்கமழும் இன்ப ஊற்று; அத் 'தென் மொழி' யெனும் நங்கை நல்லாள் செய்திருந்த ஒப்பனையைப் பதினுயிரம் கண்கொண்டு பார்க்கினும் பார்க்க வியலாதே..... - ஆ. தூயன்,
துலுக்கர்பாளையம்.

## எவரும் சுவைக்கலாம்

'தென்மொழி' படிப்பதற்கும், கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தாக விருக்கின்றது! மணம் நிறைந்தது; பல சுவையான பகுதிகள்..... நான் மட்டுமல்ல, எவ்வகை உள்ளம் படைத்தவரானாலும் நன்கு சுவைக்காமல் இருக்கமாட்டார். - கலைப்பித்தன். பி. லூயி, அரியாங்குப்பம்.

## அறிவுப் பெட்டகம்

'தென்மொழி' ஒவ்வொரு தமிழன் கையிலும் இருக்கவேண்டிய அறிவுப் பெட்டகம்.... முன் அட்டைப்படம் இன்னும் கவர்ச்சியாய் அமைய வேண்டும்.

- ப. சுப்பிரமணியம்,
பகுத்தறிவுப் பண்ணை - இலங்கை 11

# பொதுவுடைமையும்-கேரளமும்.

மக்களில் பத்துப் பெயருக்கு அறுவர் விரும்பிய வழியில் நடப்பது மக்களாட்சி என்பது பொதுப்-படையான முறை. அவ்வாறு தேர்ந்தெடுத்த ஒரு ஆட்சியை, மீதி நால்வர் எதிர்ப்பது இயற்கை. ஏனெனில் விலங்கு மாந்தனின் தன்மை அவ்வாறு அமைந்திருக்கின்றது. அறுவர் விரும்பிய ஒன்று நால்வருக்கும் பிடிப்பதாயிருந்தாலும், பிடிக்காததாகக் காண்பித்து நடப்பதால் வருங் கேட்டை அந்த நால்வரும் தனித்தனியே உணர்வாராயினும் வெளிப்படையாக அதனைக் காட்டமாட்டார்.

இப்படி வந்த அறுவர் தொடங்கிய ஆட்சியை நால்வர் எதிர்த்து முழக்கமிடுவதால் அந்த ஆட்சியை ஒழிப்பது என்று கருதுவார்க்கு ஒன்று உரைக்க விரும்புகின்றோம். ஒன்று, உங்கள் நாட்டு மக்களின் மூளையில் ஏதோ கோளாறு இருத்தல் வேண்டும். அன்றேல் நீங்கள் வகுத்த மக்களாட்சி முறையில் ஏதோ நெறி தப்பிய முறை புகுந்திருக்கவேண்டும். இந்த புரையோட்டத்தைத் தடுக்க ஒன்று, மக்களைத் திருத்தவேண்டும். இன்றேல் மக்களாட்சி முறையை மாற்றல் வேண்டும். மக்களைத் திருத்த முற்பட்டு, அவர் திருந்துதற்குள் இருக்கும் ஆட்சியே மாறினாலும் மாறும். மக்களாட்சி முறையை மாற்றுதற்கோ சிறந்த துணிவு வேண்டும். இல்லையேல், வெண்டைக்காயை விளக்கெண்ணெயில் குழைத்ததுபோல் அரசியல் வழவழப்பு அதிகரிக்குமேயன்றி, நல்ல நாட்டை அமைத்து விட முடியாது.

தமிழ் நாட்டார்க்கு அண்டை வீட்டாரும் திரவிடத்தின் பங்குக்காரரும் குடியிருக்கும் கேரளாவில் நடந்த குண்டுமாரியையும், பேச்சுமாரியையும் பற்றி அடிக்கடி செய்தித் தாள்களிற் கண்டோம். எப்படி யெப்படியோ நடந்து, முடிவில் நடு அரசியலாரின் கைக்குச் சிண்டு மாறியது. இனி, அவர் இழுத்த இழுப்புக்குப் பத்துப் பெயரும் ஆடவேண்டும். இரண்டு பூனைக் குட்டிகள் ஒன்றோடொன்று ஒத்துப்போகாமல் குரங்கிடம்போய் அப்பத்தைப் பகிர்ந்துகொண்டதாக நாம் சிறுவகுப்பில் படித்த கதைதான் இப்பொழுது நினைவிற்கு வருகிறது. கேரளாவில், தமிழ் நாட்டில் இருப்பது போன்ற கல்லாமை இல்லை. கற்றவர், இங்கு இருக்கும் விழுக்காட்டை விட அங்கு அதிகம். அப்படிப்பட்ட நாட்டில், ஆட்சி அப்பம் பிரித்த கதையை நேரில் கண்டோம். பக்கத்து வீட்டுக்குத்தானே திருடன் வந்தான். நம் வீட்டுப் பெட்டியை ஏன் மூடவேண்டும் என்று கேட்பவர் அரசியல் அகர உகர மறியாதவர். அவரைப் பற்றி நமக்குக் கவலையில்லை. நம் நாட்டைப் பற்றியும், மொழியைப் பற்றியும் நள்ளிரவில் ஒரு நொடி நேரமாகிலும் நினைத்து வருந்தும் நல்லவர் தமக்கு ஒன்று கூற விரும்புகின்றோம்.

தமிழ் நாட்டில் பல கட்சிகளும், பல தலைவர்களும் இருந்து நாட்டைக் குழப்புவது கண்டு நாம் வருந்தவேண்டி யுள்ளது. தமிழ் நாட்டுப் பிரிவினையும் இப்படி அமையுமா? ஏனெனில் தமிழ் நாட்டு அப்பம் தில்லி அமைச்சர்தம் வாய்க்கு மிகவும் சுவைக்கும். இதைத் தமிழரே கருதுதல் வேண்டும்.

# நூல்மணம்

## திருக்குறள் கி. மு. 4000

சேலம் நகராண்மை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர் முத்துப் பிள்ளை எழுதிய திருக்குறள் கி. மு. **4000** என்னும் நூலைப் பார்வையிட்டேன். இதில், திருக்குறட்கும் தொல்காப்பியத்திற்கும் பொதுவான சொற்றொடர்களையும் கருத்துக்களையும் ஆசிரியர் விரிவாக எடுத்துக்காட்டி, அது காரணமாகத் திருக்குறள் தொல்காப்பியத்திற்கு முந்தியதென்று கூறுகின்றார்.

ஒரு பொருளைப்பற்றிப் பல்வேறு கருத்துக்கள் எழுந்தால்தான், ஆராய்ச்சியின் பயனாக உண்மையான முடிவு உறுதிப்படும்.

ஆதலால், திருக்குறட் காலத்தைப்பற்றி ஆராய்ந்தறிய விரும்புவார் இந்நூலை வாங்கிப் படிக்க.

**— ஞா. தேவநேயன்.**

யாரிடமிருந்தாவது ஒரு நன்மையைப் பெற்ற பொழுது அவர்க்கு முக மலர்ச்சியோடு ''மிக்க நன்றி'' என்று கூறுவதாலும்,

யாரிடமிருந்தாவது ஒரு நன்மையை எதிர்நோக்கி யிருந்து, அவர் நன்மை செய்யாமற்போக, அவரிடம் முகஞ்சுளித்துத் திரும்பாமல் ''எனக்கு உதவாமைக்கு நீங்கள் வருந்த வேண்டாம்'' என்று அகம் மலர்ச்சியோடு கூறுவதாலும், வந்து சேர்வது கோடி நன்மையே தவிர

*நீங்கள் இழப்பது ஒன்றும் இல்லை.*

# தென்மொழி

(திங்கள் ஈரிதழ்)

தனித்தமிழ் இலக்கியப் பூங்கா.

தமிழ் மொழிச் சிறப்புக்கும், தமிழ்நாட்டு வளத்துக்கும்

அணியர்க நிற்கும் ஒரே இதழ் !

இலக்கிய மரபு கெடாத இன்சுவைச் செந்தமிழ்க்

கருவூலம் !

பழந்தமிழ்ப் பொற்பேழையில் புதுமை முத்துக்கள் !

தனியிதழ் 25 புதுக்காசுகள். ஆண்டுக்கட்டணம் ரூ. 6-00
இலங்கையில் 40 சதம். அரையாண்டுக்கட்டணம் ரூ. 3-00

**தென்மொழி**

நெல்லிக்குப்பம், (தெ. ஆ.)
தமிழ்நாடு.


## கட்டுரை, கதை, பாடல்கள் எழுதும் அறிஞர்கட்கு வேண்டுகோள்.

—:—

- '**தென்மொழி**' தூய தனித் தமிழ்க் கட்டுரை, கதை, பாடல்களையே ஏற்றுக்கொள்ளும்.
- அவ்வாறு அல்லாத நல்ல கட்டுரைகளைத் தமிழ்ப்படுத்தி வெளியிட உரிமையைத் '**தென்மொழி**' ஏற்கின்றது.
- மாணவ, மாணவிகள் பயிற்சிப் பகுதிகளைத் '**தென்மொழி**' விரைவில் வெளியிடும்,
- ஏற்றுக் கொள்ளப் பெறாத கட்டுரை, கதைகளைத் திருப்பிப்பெற வேண்டுமாயின் போதிய அஞ்சற்றலையும் உடன் வரல் வேண்டும்.
- கட்டுரைகள் தனிப்பட எவரையும் தாக்காது, பொதுப்பட அமைதல் வேண்டும்.
- தமிழ்மொழி, நாடு, மக்கள் வளர்ச்சிக்குக் கேடுதரும் கட்டுரை கதை, பாட்டு வகைகளைத் '**தென்மொழி**' கண்டிப்பாக ஏற்காது.
- உயர்ந்த கட்டுரை, கதை, பாட்டு எழுதும் அறிஞர்கட்கு ஆசிரியர் விருப்பம்போல் அன்பளிப்புத் தரப்படும்.

# கருத்துக் கோவை

## தமிழின் சொல்லிய லமைதி

வடமொழியில் சொற்களுக்குப் பாலும், எண்ணும் வேறே பொருள் களுக்குப் பாலும், எண்ணும் வேறே. 'கல்' லென்னும் பொருள் தமிழிலே அஃறிணை யொன்றன் பாற் சொல். அதன் வேறு பெயர்களும் அப்பாற் சொற்களே. வடமொழியிலோ **'கல்'** லென்னும் பொருளைக் குறிக்கும் **'பாஷாணம்'** என்பது ஆண்பாற் சொல்; அதன் பரியாயப் பெயராகிய **'சிலை'** என்பது பெண்பாற் சொல். தமிழிலே **'மனைவி'** உயர்திணைப் பெண்பாற் பொருள்; அச்சொல்லும் அப்பாற் சொல்லே. வடமொழியிலோ மனைவியைக் குறிக்கும் **தாரம்** என்னுஞ் சொல் ஆண்பாற் பெயர். அது வேயு மன்றி அச்சொல் கருத்தால் ஒருமையே யாயினும் சொல்லால் பன்மை யேயாம். இந்தியில் இவ்வாறுள்ள மாறுபாடு வட மொழியை நோக்கக் குறைவென்பதே யன்றித் தமிழை நோக்க மிகுதியேயாகும்-

பழைய ஆங்கில மொழியிலே மேற்கூறிய குறை இருந்தது. டம் (Dom) ஈற்றுன் முடிவனவாகிய Freedom முதலியன ஆண்பாற் பெயர்கள். நெஸ் (Ness) ஈற்றுன் முடிவனவாகிய Goodness முதலியன பெண்பாற் பெயர்கள். யென் (En) ஈற்றுன் முடிவனவாகிய Maiden, Chicken முதலி யன அஃறிணைப் பெயர்கள். பண்டிருந்த இம்மாறுபாடு இக்காலத் தறிஞர் களால் ஒழிக்கப்பட்டன. தமிழ்மொழியோ இத்தகைய குறைபாடு பண்டே யில்லாதது. இது தமிழின் **சொல்லிய லமைதிக்கு** ஓர் எடுத்துக் காட்டா கும்.

**(தமிழ்ப் பொழில் 1925)**

o o o

## பாட்டும், சொல்லும்.

பிறர் துன்பத்தைக் காணும் போது, தனது துன்பம் போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும், பிறர் துன்பத்தைக்கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துப் பாடல் செய்யப் பழகுவாராயின் முந்தி[illegible] உண்மையான பாடலை எழுதுவான்; பிந்தியவன் சொற்களைப் பின்னு[illegible].

**- பாரதியார் கட்டுரைகள்**

## கொலைகாரர்கள்.

உயிர்களைக் கொல்லச் சொன்னவனைவிடக் கொன்றவனும், கொன்றவனை விட ஊனை அறுப்பவனும், அறுப்பவனை விட அதனை விற்பவனும், விற்பவனை விட அதனை விலை பேசி வாங்குபவனும், வாங்குபவனை விட அதை அவித்துச் சமைப்பவனும், சமைப்பவனை விட அதனைத் தின்னென்று விருந்திடுபவனும், விருந்திடுபவனை விட அதனைச் சுவை யென்று தின்கிறவனும் கொடிய கொலைகாரர்களேயாம்.

o o o o o

தமிழ் மொழியிலோ யார் என்ன செய்த போதிலும் கேள்வி முறையில்லை. அவரவர் தத்தமக்குத் தோன்றியவாறும் வாய்க்கு வந்தவாறும் எழுதுகின்றனர். இவ்வாறு செல்லவிடுதல் கேடே, தமிழிலக்கணமுடையார் முற்புகுந்து இதனைச் சிறிது அடக்கியாளலும் வேண்டும்.... இந்நிலை மிகுந்து கொண்டே போமாயின் புலவர் தமிழ், வட மொழியைப்போலப் பேச்சு வழக்கற்று! ஏட்டு வழக்காய் மட்டில் நின்றுவிடும்.

- **பரிதிமாற் கலைஞர்.**
தமிழ் மொழியின் வரலாறு,

★ ★

## கூறுபட்ட தமிழ்த்தாய்.

சிறப்பு வாய்ந்த நமது அருமைத் தமிழ் நாடெங்கே? தமிழ் நாட்டின் வழக்க வொழுக்க மெங்கே? அன்பெங்கே? அரசெங்கே? மறத் தாய்மாரெங்கே? தமிழ்த் தாயெங்கே? தமிழர்களே! உங்கள் பெருமை என்ன? உங்கள் ஆண்மை என்ன? உங்கட்குள் இது போழ்து எத்துணைப் பிரிவு? நம் தமிழ்த்தாய் கால் வேறு, கை வேறு, தலை வேறு, வேருகக் கூறுபட்டுக் கிடப்பதைக் காண உங்கட்குக் கண்ணில்லையா? நினைக்க மனமில்லையா? மீண்டும் நீங்கள் பண்டை நிலை எய்த வேண்டாமா? வேண்டுமேல் பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து உண்மைத் தமிழ் நாட்டைக் காண எழுங்கள்! எழுங்கள்!!

- **தமிழ்த் தென்றல் - திரு. வி. க.**

o o o

மேலும் மேலும் மாந்தர் அறிவில் மேம்பட்டு அழிவையே நாடுகின்றனர். பாட்டு முதலிய கலையுணர்ச்சியின்றி அறிவு முழுமைப் பயனற்றதாகும்.

- **மத்தேயு ஆர்னல்டு.**
(வக்கணைக் கட்டுரைகள். பக்கம் 2. Essays is criticisim. P. 2.)

---

(Intelligence helps man; but does not run him)
அறிவு மாந்தற்கு உதவுகின்றது. அல்லாமல் அவனை இயக்குவதில்லை.

**ஐ. ஏ. ரிச்சர்டு**
அறிவியலும் பாவியலும். (Science and poetry)




# பாட்டும் கூத்தும்!

-[ மாரி — அறவாழி ]-

(கலை என்பது இயற்கை நுகர்ச்சி, தூய்மையான நீல வான் போன்றது கலை. உள்ளத் தாழ்வும் ஒழுக்கக் குறைவும் போன்ற செயற்கை முகிலினம் படரும் காலை துல்லியமான நீல வண்ணம் நன்கு ஒளிர முடிவதில்லை,

கலைஞனும் அப்படிப்பட்டவனே. இயற்கையை விட்டு விலகிய,எந்தக் கலையும் ஒருவர்க்குத் தூய்மையையோ, அமைதியையோ தந்துவிட முடியாது. சுண்ணமும், செங் கற்களும் போர்த்திய மாடி வீடுகளில் அமர்ந்து கொண்டு முல்லைக் காட்டின் குளிர்மையையும், காவிரி மணற் பரப்பின் வெது வெதுப்பையும், மலையினின்று கொட்டும் அருவியின் சிலிர் சிலிர்ப்பையும் அறிய முடியாது. அறிவு வேறு; கலை வேறு. அறிவு, மூளைத் தெளிவு. கலை, உணர்வுத் தெளிவு அறிவுங் கலையும் பின்னிப் பிணைந்த பாடல்களே நம் இலக்கியங்கள் இதைப் படிப்பது இன்பம், பாடுவது இன்பம், இந்த இன்பத்தில் மூழ்கும், அன்பர் மாரி அறவாழி நல்ல இலக்கியச் சிறுகதை எழுத்தாளர் அவர் கதைகளில் மக்கள் உள்ளங்களின் உயர்வு தாழ்வுகளும், தெளிவு, சுழிவு களும், கோணல், மாணல்களும் நன்கு காட்டப்படுகின்றன. தமிழ் நாட்டு எழுத்தாளரில் பலர் பொருள் மேல் நிற்பவர் பலர் அருள் மேல் நடப்பவர்; பலர் துணையால் எழுந்தவர். பலர் நிலையால் ஒளிர்ந்தவர்; ஒரு சிலரே திறமையால் உயர்பவர். திரு. மாரி அறவாழி இலை மறைந்த கனி. தமிழுலகம் இவர் எழுத்துக்களைப் போற்றும் நாள் ஒன்று உண்டு.]

— ஆசிரியர்.

மண்டையைப் பிளக்கும் வெயில், அனலலைகள் காற்றிலே அடுக்கடுக்காய் மிதந்து வந்தன; அப்பப்பா! அந்தக் கொடுமைக்கிடையே எவ்வளவு தொலைவுதான் நடந்து தொலைப்பது. நடக்க நடக்கக் 'கொன்றை யாறு'க்குச் செல்லும் ஒற்றையடிப்பாதை நீண்டு கொண்டுதானிருந்தது. காலில் செருப்பும் தலையில் துண்டும் அணிந்திருந்தேன். அப்படியிருந்தும் கானலைத் தாளமுடியவில்லை. நிழலுக்காகச் சற்று அமரலாம் என்று எண்ணி சுற்றும் முற்றும் பார்த்தேன். சிறிது தொலைவில் ஒரு பனந்தோப்பு தென் பட்டது. ஓட்டமும் நடையுமாக அங்கு ஓடினேன். ஏழெட்டு மரங்கள் நெருங்கி வளர்ந்திருந்த இடத்தில் உட்கார்ந்தேன்.

முகத்தில் வழிந்த வெயர்வையைத் துண்டினால் துடைத்துக் கொண்டே கண்களைச் சுழற்றினேன். பசுமையான காட்சி ஒன்றுவது தென்பட வேண்டுமே!... கண்களுக்கெட்டியவரை ஒரே வறண்ட செம் மண் நிலப் பரப்புத்தான்! இடை யிடையே சிறு சிறு கரடுகளும் அதைச் சூழ்ந்து சில கிளுவை மரங்களும், ஊஞ்சில் மரங்களுமே வரிசையாக வளர்ந்து நின்றிருந்தன. பசுமையைப் போலவே ஆள் நடமாட்டமும் அங்கு அருமை யாக இருந்தது.

அந்தச் சூழ்நிலை என் நெஞ்சினுள் ஏதோ ஒரு வகையான அச்ச உணர்வைக் கிளறி விட்டது. வாழ்நாளில் அதற்கு முன் அதுபோன்றதொரு இடத்தைப் பார்த்ததே இல்லை. நண்பர் ஒருவரின் திருமணத்திற்காகத் தவிர்க்க முடியாத நிலையில் அந்தக் கொங்கு மண்டத்தின் கொடுமைக் கிடையே சென்று தொலைக்க வேண்டியிருந்தது. வற்றாத காவிரிக் கரை யோரங்களிலும், வளமார்ந்த நிழலின் கீழும், நெடிதுயர்ந்த நீண்ட தென்னை மர வரிசைகளுக்கிடையேயும், நடந்து நடந்து பழக்கப்பட்ட எனக்கு அச் செம்மண் பாலை அச்சத்தை உண்டாக்கிவிட்டதில் வியப்பொன்றுமில்லை.

கொங்கு நில மக்களைப்பற்றி எண்ணினேன். அந்தோ! இது போன்ற வறண்ட பாலைகளில் கூட அவர்கள் வாழவேண்டியிருக்கிறதே!

தோப்பினுள் நுழைந்த கானல் காற்று சிந்தனையைக் கலைத்தது. துள்ளி எழுந்தேன். புறப்படலாம் என்றெண்ணி இரண்டடி எடுத்து வைத்தேன். வெயிலின் கொடுமை விநாடிக்கு விநாடி மிகுந்து வருவதை அப்போது தான் உணர்ந்தேன். பேசாமல் திரும்பிச் சென்று பழைய இடத்திலேயே அமரலாம் என்றெண்ணினேன். அதற்குள் தோப்பு முழுவதையும் ஒரு முறை சுற்றிப் பார்த்துவிடலாமே என்ற ஆசை எழுந்தது. மெதுவாக நடந்துகொடுத்தேன்.

தோப்பின் தென்புறத்தை அடைந்தபோது அங்கே சற்றுத் தொலைவில் கண்ட காட்சி என் கருத்தை ஈர்த்தது. துண்டை விரித்துப் போட்டு உட்கார்ந்து அமைதியாக நோக்கினேன்.

உடலை வறுத்தெடுக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது, அங்கே. ஓர் இளைஞன் பாறையின் மேல் உட்கார்ந்து கல்லுடைத்துக்கொண்டிருந்தான். கொடுமையும் தனிமையுமே போட்டியிட்டுக் கொண்டிருந்த அவ்விடத்தில், அவனது சிற்றுளி, பாறையின்மேல் மோதும்போது உண்டாகும் ஒலியே, 'ணங் ணங்' கென்று ஒலித்துக் கொண்டிருந்தது!.

என் நெஞ்சம் கரைந்துருகியது. "இந்த ஒரு சாண் வயிற்றுக்காக இப்படியும் மக்கள் உழைத்து உயிர்விட வேண்டியிருக்கிறதே! நகர்ப்புறங்களில் ஒரு சில கூட்டத்தார் உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாமலேயே ஆயிரக்கணக்கில் ஊதியம் பெறுகின்றனரே "மக்கள் யாவரும் ஓரினம் ஓர் நிறை" என்பது உண்மையானால் வெறுக்கத்தக்க இந்த ஏற்றத் தாழ்வுகள் ஏன்?"

யரோ ஒருவர் தென்பாங்குப் பாடலொன்றை சீழ்க்கை யொலியில் இழைத்துப் பாடுவது காற்றிலே மிதந்து வந்தது. உற்றுநோக்கினேன் அந்தக் கல்லுடைக்கும் இளைஞன்தான் மகிழ்ச்சியோடு பாடிக் கொண்டிருந்தான்.

என்ன விந்தை! எத்துணை மகிழ்ச்சி! அனல் பறக்கும் வெயில், அழல பற்றும் கருங்கற்பாறை, உடலைக் கூனிக் குறுகச் செய்யும் கடின உழைப்பு, இத்துணைக் கிடையேயும் அந்த இளைஞன் இன்ப நிறைவோடு காணப்படுகிறானே! என்போன்றோரானால் இந்நேரம் மணலில் இழுத்தெறிந்த கயலாகவன்றோ துடிதுடிப்பர். இவனால் எப்படி இப்படியிருக்க முடிகிறது? இவனும் என்னைப்போல் ஒருவன் தானே!... என்னை வாட்டும் வெப்பம் இவனை மட்டும் வாட்டாமலிருப்பது ஏன்?

காரணம புரிந்தது. அவனும் என்னைப்போன்ற மாந்தன் தான். ஆனால் அவனுக்கும் எனக்கும், காட்டில் வளரும் தேக்குக்கும் நாட்டில் வளரும் முருங்கைக்கும் உள்ள வேற்றுமை இருக்கிறது.

இன்றைய தமிழனிடத்தில் செல்வம் உண்டு; வணிகம் உண்டு; பெருந் தொழில்கள் செய்யத் திறமை உண்டு; அரசியல் அறிவும் சிறிது உண்டு; நாட்டைப் பற்றிக் கவலைப் படுவது போல் நடிப்பது மிக உண்டு; ஆனால் அன்றைய தமிழனிடம் மிகுவாகக் குடிகொண்டிருந்த இனப்பற்றும, இரக்கப் பாண்மையும் மருந்துக்கும் இல்லாதிருப்பது......

**ஒரே ஒரு குறை**

கல்லுடைப்பவனை மீண்டும் பார்த்தேன், அவன் அப்போது தன் வேலையை நிறுத்திவிட்டு கீழ்த்திசையில் யாரையோ எதிர் பார்ப்பவன் போல நின்று கொண்டிருந்தான். அப்படி அவன் யாரை எதிர் பார்த்தான் என்பது சிறிது நேரத்தில் விளங்கியது.

கிளுவை மர வரிசைக்குப் பின்னுலிருந்து இளம்பெண் ஒருத்தி அவனை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அவள் அவனது மனைவியாக இருக்கவேண்டும். அவள் தலையில் கஞ்சிக் கலயம் இருந்தது. இடுப்பில் இரண்டு வயதுக் குழந்தையொன்று இருந்தது.

இளைஞன் ஓடிச்சென்று அவளை எதிர்கொண்டழைத்தான். அவளது இடுப்பிலிருந்த குழந்தையை வாங்கித் தன் மார்போடணைத்து முத்தமிட்டுக் கொஞ்சினுன். இருவரும் ஒரு மர நிழலில் சென்று உட்கார்ந்தனர். அவள் கஞ்சிக் கலயத்தை இறக்கிவைத்தாள். ''குழந்தையை இறக்கி விட்டுக் கை கழுவிக் கொள்ளுமாறு கணவனுக்கு அன்புக் கட்டளை யிட்டாள். அவனும் அவ்வாறே செய்தான்;

அவள் செம்பிலிருந்த தண்ணீரை ஊற்றினுள். அவன் தன் அழுக்குக் கைகளைத் தேய்த்துக் கழுவிக்கொண்டிருந்தான்.

மண்ணில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை அவ்வேளை பார்த்து எழுந்தது. நகர்ந்து நகர்ந்து கஞ்சிக் கலயத்தினருகே சென்றது. மூடியை இறக்கிவைத்துவிட்டுப் புழுதி கலந்த தனது இரு கைகளையும் கஞ்சிக்குள் விட்டுத் தோய்த்து கலக்கி விளையாடியது.

அப்பொழுதுதான் அதனைக் கண்ணுற்ற 'இளம் தாய்' திடுக்கிட்டாள். குடிக்கும் கஞ்சியில் புழுதிக் கையை விட்டு விளையாடுகிறுனே என்று குழந்தைமேல் சினம் கொண்டாள். அதனை அடிக்க ஓங்கினுள். கணவன் அதைத் தடுத்தான்.

''....அடிக்காதே முத்தாயி! குழந்தைக்கு என்ன தெரியும்....' என்று கூறி அவளை ஆறுதல் படுத்தினுன்.

மனைவி, கஞ்சிக் கலயத்தை அவன் முன் நகர்த்தினுள். அவன் அதைக் கலக்கிக் கொண்டே என்னவோ பேசமுயன்றுன்.

''...கதையெல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாம்... நேரமாகி விட்டது...வயிறு ஒட்டிப்போய்விடும்... முதலில் கஞ்சியைக் குடியுங்கள்...''

அவனை அடக்கிக் கொண்டே, அவள் தன் மடியில் வைத்திருந்த புளித்துகையலை எடுத்துப் பிரித்து நீட்டினுள்.

கஞ்சியைக் குடிப்பதற்காக அவனும் கலயத்தைத் தன் உதட்டருகே கொண்டு சென்றான். மறு நொடி என்ன நினைத்துக்கொண்டானோ தெரியவில்லை. கலயத்தை இறக்கினான்.

''ஏன்?'' என்று மனைவி கேட்டாள்.

''...நீ குடித்துவிட்டாயா?...'' அவன் அவளைத் திருப்பிக்கேட்டான்

''...அதெல்லாம் வீட்டிலேயே ஆயிற்று!. நீங்கள் குடியுங்கள்..''

''...உன்னை விட்டு விட்டு நான் மட்டும் எப்படிக் குடிப்பேன் முத்தாயி! இதோ... நீயும் கொஞ்சம் குடி..:!''

''..,இல்லீங்க, எனக்கு வேண்டாம்...நீங்க குடியுங்க...''

''...ஊஉம்! மாட்டேன். நீயும் குடித்தால் தான்...''

அவன் கொஞ்சுவது போல் செல்லமாகச் சிணுங்கினான். அவளுக்குச் சிரிப்பு வந்தது. என்றாலும்... கடுமையாகப் பேசுவது போலப் பேசினாள்.

''...இதென்ன தொல்லையாய்ப் போயிற்று!... சரி...சரி நீங்க குடித்துவிட்டுக் கொஞ்சம் மிகுதி வைங்க....''

''...இல்லையில்லை....! முதலில் நீ குடித்துவிட்டுத் தா. உன் எச்சில் பட்டால்...இது இனிக்கும்...''

இப்படிக் கூறிவிட்டு அவன் பல்லை இழித்தான். அவள் புன்னகை பூத்தாள்.

''...அடேயப்பா! ஆளைப்பாருங்க ஆளை...! ஒரு குழந்தைக்கு அப்பனாகிவிட்ட பிறகுமா விளையாட்டுத் தீரவில்லை''

இருவரும் கலகல வென்று சிரித்தனர். அவன் தன் கைகளாலேயே அவளுக்குக் கஞ்சியைப் பருக்கினான். அவள் குடித்தது போக மிகுந்ததை களிப்போடு வாங்கிக் குடித்தான்.

அந் நிகழ்ச்சியையே கண்ணிமைக்காமல் அத்துணை நேரமும் சுவைத்துக் கொண்டிருந்தேன். நெஞ்சம் நெகிழ்ந்தது. கண்களில் நீர்த் திரை படர்ந்தது. ஆம்! அது மகிழ்ச்சிக் கண்ணீர்! உள்ளத்தில் இளந் தென்றல் வீசியது! ஆம்! அது இலக்கியத் தென்றல்!

பனைமரங்கள் காற்றிலே அசைந்தன. ஓலைகள் சலசலத்தன. ஆனால் அந்த ஒலி என் செவிகளில் விழவில்லை. என்றோ கல்லூரியில் படித்த கலித்தொகைப் பாடலொன்றே ஒலித்துக் கொண்டிருந்தது, உள்ளம்.

''அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாஅய்! ''காடு'' என்றார், அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின் உண்ணுங் களிறெனவும் உரைத்தனரே',

அழலெனப்பற்றும் கொடிய பாலையில், சிறிதளவே தேங்கியிருந்த சுனை நீரை, விடாய் கொண்டு ஆண் யானையொன்று கண்டு தனது கன்றை யும் பிடியையும் உடன் அழைத்துக்கொண்டு குடிக்க விரைந்து சென்று கன்று தன் பிள்ளைக் குறும்பால் அச்சுனையில் துதிக்கையை விட்டுத் தெளிந்த நீரைக் குழப்பிக் கலக்கியது. அதைக்கண்டு ஆண் யானை சின மடையவில்லை. கிடைத்த சிறிதளவு நீரைத் தானே முதலில் குடித்துத் தனது வேட்கையைத் தணித்துக் கொள்ளவும் முயலவில்லை. முதலில் காதல் பிடிக்கு ஊட்டிய பின்னரே மிகுந்ததைத் தான் அருந்தியது.

''பெருங்கடுங்கோ'' இந்த அழகிய காட்சியைக் கலித்தொகையில் சொல்லோவியமாக அழகுபடத் தீட்டியிருக்கிறார். அது அவர் நேரிற்கண்ட காட்சியோ அன்றிக் கற்பனையில் கண்ட காட்சியோ தெரியவில்லை. ஆனால் நானோ நேரிலேயே கண்டேன்! ஆம் சற்று முன்புதான்! களிற்றுக்கும் பிடிக்கும் பதிலாக....காதல் கொண்ட மானிட ''இணை'' யொன்று என் காட்சியில் இடம் பெறுகிறது. அதனாலென்ன! எனது காட்சிக்கும், பெருங்ககடுங்கோவின் பாட்டுக்கும் சிறிதளவாவது ஒற்றுமை இருக்கிற தல்லவா!

o o o o

உந்து வண்டிகளின் (Motor cars) முன்பக்கம் அமர்ந்துகொண்டு, வண்டி யோட்டியிடம் சுவையாகப் பேச்சுக் கொடுத்துக் கொண்டு, அவருடைய கருத்தைத் தன் பக்கம் திருப்பி, வண்டி மோதல்களை ஏற்படுத்தும் தீய பழக்கத்தை தன் நலத்தையும், மக்கள் நலத்தையும் கருதியாவது இன்றி லிருந்து




யாராவது நீங்கள் எந்த இனம் என்று கேட்டால் 'மக்களினமென்றும்' 'எந்த வகுப்பு' என்று கேட்டால் 'ஆண் வகுப்பு' என்றும், அல்லது 'பெண் வகுப்பு' என்றும், 'எந்தச்சாதி' என்று கேட்டால் 'தமிழர் சாதி' என் றும், வெடுக்கென்று துணிந்து சொல் லும் ஒற்றுமை முறையை.... இன்றி லிருந்தாவது



இலக்கியம்

அரசியல்

மொழியாராய்ச்சி

அறிவியல்

நூல்களை

நல்லமுறையில்

வெளியிடுகின்றோம்.

**வள்ளுவர் பதிப்பகம்,**
நெல்லிக்குப்பம்,
(தெ. ஆ.)
தமிழ்நாடு.

**தென்மொழி**
**விளம்பரக் கட்டணம்.**

—

| | |
|---|---|
| அட்டை நான்காவது பக்கம் முழுமையும் ... | ரூ. 50-00 |
| ,, இரண்டாவது அரைப் பக்கம் | ரூ. 25-00 |
| ,, மூன்றாவது முழுப்பக்கம் | ரூ. 40-00 |
| ,, ,, அரைப்பக்கம் | ரூ. 20-00 |
| உள்ளே முழுப்பக்கம் | ரூ. 30-00 |
| ,, அரைப்பக்கம் | ரூ. 15-00 |
| ,, கால்பக்கம் | ரூ. 8-00 |

வரி விளம்பரங்கட்குத் தனியே எழுதவும்.

அமைச்சர்
**தென்மொழி**
நெல்லிக்குப்பம்,
தெ. ஆ. மாவட்டம் (தமிழ்நாடு)

தெளிவான அச்சுக்கும்
உறுதியான நூற் கட்டடங்கட்கும்,
சிறந்த ஒத்துழைப்பிற்கும்,
**எங்கள்**

**அச்சகத்தை நாடுங்கள்.**
குறித்த காலத்தில்
எந்த வேலையையும் செவ்வையாகச் செய்து
தருகின்றோம்.

ஸ்ரீதரன் அச்சகம்,

**நெல்லிக்குப்பம்.**

# தமிழ்ப் பெருங்குடி மக்கட்கு அரியதோர் நல்வாய்ப்பு!

★ நீங்கள் எந்த வேலையுமின்றி வாழ்க்கையில் துன்பம் காணுகின்றீர்களா......?

★ ஓய்வுக் காலங்களில் உங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள விரும்புகின்றீர்களா...?

★ உங்கள் வீடுகளில் இருந்துகொண்டே அஞ்சல் வழியே தமிழில் படித்து, மருத்துவர் (DOCTOR) ஆக விரும்புகின்றீர்களா ?

**அவ்வாருனால்**

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த
**ஆண்களும், பெண்டிரும்,**
நமது கல்லூரியில் சேர்ந்து, குறைந்த செலவில்
**ஓமியோபதி** மருத்துவத்தைக் கற்றுச்
சிறந்த மருத்துவர் (DOCTOR) ஆகுங்கள்,
இதுவரையில் பல்லாயிரக் கணக்கானோர் படித்துப்
பட்டம்பெற்று, எம்மால் பலனடைத்துள்ளனர்.

**நீங்களும் பலனடையலாம்,**

விலையற்ற விளக்கங்கட்கு இன்றே எழுதுங்கள்

# ஓமியோபதி

## தனிவேற்றுக்(டுடோரியல்)கல்லூரி

**நெல்லிக்குப்பம்.**

**HOMOEOPATHI TUTORIAL COLLEGE**
**NELLIKUPPAM.**


வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், கூ. இரா. செகந்நாதன் அவர்களால் நெல்லிக்குப்பம் (தெ, ஆ. மாவட்டம்) ஸ்ரீதரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, பெருஞ்சித்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது.